Library

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICALS


# எழுகதிர்

ஐரோப்பிய பதிப்பு

ELUKATHIR

Rs20 | Euro0.50

வாரஇதழ் | இதழ்: 44 | 04.06.2013


## நவநீதம்பிள்ளை வருகிறார் ஆகஸ்ட் 25முதல் 31 வரை!

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை இலங்கையில் அவர் தங்கியிருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிலைமைகள் குறித்து நேரில் கண்டறிந்து கொள்வதற்கு இந்த விஜயம் சந்தர்ப்பமாக அமையும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவிற்கான பிரதிநிதி ரவினாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளை 2011ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த போதிலும் அவர் விடுத்திருந்த உத்தியோகபூர்வ அழைப்பை இலங்கை அரசாங்கம் நீடித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கச்சதீவு: இந்தியா பறிக்கும்!?

இந்திய அரசின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசமைப்பிலிருந்து நீக்குவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கச்சதீவை மீளப்பெறுவதற்கு டில்லி நிர்வாகம் உத்தேசித்துள்ளது என உயர் இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.


இந்த விவகாரம் சம்பந்தமாக காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் உள்ளிட்ட அரச உயர்மட்ட பிரமுகர்கள் தமது இராஜதந்திரிகளுடன் டில்லியில் ஆலோசனை நடத்திவருகின்றனர் என்றும் அவ்வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வொன்றாக 1987இல் இலங்கை இந்திய அரசுகளிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு எதிராக இலங்கையில் என்றுமில்லாதவாறு தற்போது பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

குறிப்பாக, கூட்டணி அரசின் கடும்போக்குடைய பங்காளிக்கட்சிகள் 13இற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளதுடன், அதை நீக்குமாறு கோரும் பிரேரணையொன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துவருகின்றன. அத்துடன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டாபாய ராஜபக்ஷ மற்றும் அரச சார்புடைய கடும்போக்குடைய சிங்கள அமைப்பினரும் 13 இற்கு எதிராகக் கருத்துகளை வெளியிட்டுவருகின்றனர்.

(11ம் பக்கம் பார்க்க)

## சுதர்சன நாச்சியப்பன் டில்லியில் மீண்டும் மாநாடு!



தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் ஆராய்வதற்காக இந்தியாவில் கூட்டப்படும் மாநாட்டில் பங்குபற்றுமாறு புலம்பெயர் தமிழர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்திய மத்திய அரசின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பனினால் இந்த மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுவது தொடர்பில், இங்குள்ள தமிழ்க் கட்சிகளை டில்லிக்கு அழைத்து இவ்வாறானதொரு மாநாட்டை 2011 ஆம் ஆண்டு சுதர்சன நாச்சியப்பன் நடத்தியிருந்தார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் என்ற கோஷம் இலங்கை அரச மட்டத்தில் எழுந்துள்ள நிலையிலேயே மேற்படி மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(11ம் பக்கம் பார்க்க)

## அரசியல் ரீதியில் வலுப்பெற தாய்லாந்து பிரதமர் அழைப்பு!



இலங்கையும் தாய்லாந்தும் ஜனநாயக அரசாட்சி நடத்தும் இரண்டு நாடுகள் என்றபோதும் இரு நாட்டு ஜனநாயக ஆட்சிக்கும் சில சமயங்களில் அழுத்தங்கள் காணப்பட்டதாக தாய்லாந்து பிரதமர் யின்லக் சின்வாத்ரா தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட நாடுகள் என்ற அடிப்படையில் இலங்கையும் தாய்லாந்தும் அரசியல் ரீதியில் வலுப்பெற்று செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை வந்த தாய்லாந்து பிரதமர், பிற்பகல் பாராளுமன்றத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு அங்கு பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையும் தாய்லாந்தும் புத்த தர்மத்தை

(11ம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு: கூட்டமைப்பு நம்பிக்கையில்லை!

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வின் ஊடாக தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியும் என்ற நம்பிக்கை தமக்கு கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கடும்போக்குவாத பௌத்த பெரும்பான்மைவாதம் மேலோங்கியுள்ள தற்கால சூழ்நிலையில், ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வென்பது நடைமுறைச் சாத்தியமா என்ற கேள்வி எழுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தேச தீர்வுத் திட்டம் தொடர்பிலான தமது கட்சி நிலைபாடு விரைவில் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கட்சி உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்ததன் பின்னர் இது குறித்து அறிவிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதிகாரப் பகிர்வு தொடர்பில் சில பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஓராண்டு கடந்துள்ள நிலையிலும் அதற்கான பதில் எதனையும் வழங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்ற வேண்டுமாயின் படையினரை அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியேற்ற வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக மீள் குடியேற்றப்பட்டுள்ளதாக அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் தெரிவித்து வந்த போதிலும், இதில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படாதிருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாக மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

நட்புறவுடன் நாட்டைக் கட்டியெழுப்புவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உபகரணங்கள் வழங்கல்

பனை சார் கைப்பணி பயிற்சியாளர்களுக்கு 19 இலட்சம் ரூபா பெறுமதியான கைப்பணி உபகரணங்கள் கையளிக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்தி சபை தலைவர் பசுபதி சிவரத்தினம் தெரிவித்தார்.
மட்டக்களப்பு ஆலங்குடா பகுதியில் பனை உற்பத்தி கைப்பணி பயிற்சிபெற்ற 190 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறும தியான பனை சார் உற்பத்தி கைப்பணி உபகரணங்கள் கையளிக்கப்படவுள்ளன.
இவ் உபகரணங்களை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும்; 7 ஆம் திகதியளவில் வழங்கி வைக்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## புதுக்குடியிருப்பு வைத்தியசாலை திறப்பு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் ஆகியவை கடந்த வாரம்




திறந்து வைக்கப்பட்டன.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்த கட்டிடங்களைத் திறந்து வைத்தார்.
யுத்தத்தினால் புதுக்குடியிருப்பு வைத்திய சாலை முற்று முழுதாக அழிக்கப்பட்ட நிலையில் தற்போது மீள்குடியேற்றத்தின் பின்னர் இந்த வைத்தியசாலை 26 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட்டுள்ளது.
அதேபோன்று புதுக்குடியிருப்பு பிரசே செயலகமும் யுத்தத்தினால் சேதமடைந்திருந்த நிலையில் 56 மில்லியன் ரூபா செல வில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
இந்த கட்டி திறப்பு விழா நிகழ்வுகளில் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன், உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் விஜய தஹநாயக்க, நாடாளுமன்ற உறுப்பின் முனைஸ் பாரூக், வடமாகாண ஆளுனர் ஜீ.ஏ சந்திரசிறி, மற்றும் முல்லை மாவட்ட அரச அதிபர் வேதநாயகன், திணக்கள தலைவர்கள் உத்தியோகஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வீதி புனரமைப்பு

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேச செய லாளர் பிரிவில் தேசத்திற்கு



மகுடம் திட்டத்தின் கீழ் நான்கு வீதிகள் புனரமைக் கப்பட்டுள்ளன.
நான்கு வீதிகளின் புனரமைப்பு பணிகள் நிறைவுபெற்ற நிலையில், அவற்றை மக்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது.
இந்நிகழ்வில், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கலந்துகொண்டு வீதிகளை உத்தியோகபூர்வமாக மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.
இத்திட்டத்தின்கீழ், காத்தான்குடி 6ஆம் குறிச்சி ஜன்னத் மாவத்தைவீதி, பாவலேன் வீதி, றசீத் வீதி, எச்.ஆர்.எம். வீதி ஆகிய வீதிகளே நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர் முன் னாள் மாகாண சபை உறுப்பினர் கே.எல்.எம்.பராட் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## புதிய வீதி

திருகோணமலை மாவட்டத்தின் சேருவில பகுதியையும் பொலன்னறுவை மாவட்ட த்தின் சோமாவதி பகுதியையும் இணைக்கும் புதிய வீதியான சரத்



நிமால் சில்வா வீதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த வாரம் திறந்துவைத்தார்.
அத்துடன், இந்த வீதியில் மகாவலி ஆற்றுக்கு மேலாக அமைக்கப்பட்ட 183 மீற்றர் நீளமான தற்காலிக பாலமும் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களின்; பாவனைக்கு விடப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, கிழக்கு மாகாண முதல் அமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கோட்டை புனரமைப்பு

யாழ்.நகரிலுள்ள கோட்டை பலகோடி ரூபா செலவில் அரசினால் தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.
போத்துக்கேயர் இலங்கையின் வடபகுதியில் தமது பெயரை நிலைநாட்டும் நோக்கில் 1619ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டையினை நிறுவினர்.
1658ஆம் ஆண்டு ஒல்லாந்தர்களால் இக்கோட்டை கைப்பற்றப்பட்டு பின்னர் இடிக்கப்பட்டு மீண்டும் தற்போது காணப்படும் ஐந்து பக்கங்கள் கொண்ட நட்சத்திர வடிவிலான கோட்டை உருவாக்கப்பட்டது.
பின்னர் இக் கோட்டை 1795ஆம் ஆண்டு எந்தவித போராட்டமும் இன்றி ஆங்கிலேயர் வசமானது. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடையும் வரை ஆங்கிலேயர் வசமே இக் கோட்டை காணப்பட்டது.
இக்கோட்டை கடந்த கால யுத்தத்தின் போது பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த சேதங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.
இக்கோட்டையை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கும் வகையில் அரசாங்கத்தின்; பல கோடி ரூபா செலவில் தற்போது புனரமைக்கப்பட்;டு வருகின்றது.

### வெலிக்கடைச்சிறைப் படுகொலையின் 30வது ஆண்டு நினைவுக்கான ஆவணசேகரிப்பு !

கடந்த 1983 யூலை மாதம் 25ம்; 27ம் திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலையின் 30வது ஆண்டு நினைவையொட்டி,படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பான ஆவணச் சேகரிப்பு ஒன்றினை மேற்கொள்வதற்கான முயற்சியில் இலங்கையர் ஒருமைப்பாட்டு மையம் ஈடுபட்டுள்ளது

அன்று படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பிலான குறிப்புகள், கடிதங்கள், புகைப்படங்கள் மற்றும் சாட்சியங்களாக இருக்கும் நபர்கள் போன்ற விபரங்களைத் தந்துதவுமாறும் அத்துடன் தற்போது அரசியற் காரணங்களால் சிறை வைக்கப்பட்டிருப்பவர்கள் பற்றிய தெரிந்த விபரங்களையும் தந்துதவுமாறு சார்ந்தவர்களின் உறவினர்கள் நண்பர்கள் சமூகஆவலர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். இதனை ஒரு பொதுப் பணியாகக் கருத்தில் எடுத்து அனைவரும் தங்களால் இயன்ற ஒத்துழைப்பினை வழங்குவதுடன் இத்தகவலை அனைவருக்கும் பகிர்ந்துகொள்ளவும்

**இலங்கையர் ஒருமைப்பாட்டு மையம்**

தொடர்பு:
centre.solidarite.srilankais@gmail.com tel:- (33) 07 51 41 33 05.
Facebook : CENTRE DE SOLIDARITE DES SRILANKAIS






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்

Elukathir Weekly

Kandy Road, Karaddypokku, Kilinochchi

elukathirnews@gmail.com

முகநூல்: Elukathirthagaval

# நமது நோக்கு

## மீள்குடியேற்றமும் கூட்டமைப்பு நிலைப்பாடும்!

தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தை கொண்டுவந்தபோது அதன் பிதாமகர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கூட இப்படி நடக்கும் என்று கனவிலும் கூட நினைத்திருக்கமாட்டார். சர்வ வல்லமைபொருந்திய ஜனாதிபதி ஆட்சிமுறையை நாட்டுக்கு அமுலுக்கு கொண்டு வந்தபோது, ஜே.ஆர். நினைத்ததெல்லாம் இனி எவருமே அதனை மாற்ற முடியாது என்பதுடன், ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர வேறு எவருமே ஆட்சிக்கு வரப் போவதில்லை என்பதும் தான்.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றில் ஒரு சில உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சியில் இருந்தபோதும், நாட்டின் வாக்காளர்களில் நாற்பத்தி ஐந்து வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தது. அதனால்தான் விகிதாசார வாக்களிப்பு முறையையும் நாட்டுக்கு அறிமுகம்செய்தார் ஜே.ஆர்.

ஆனால் அவரது கணிப்பு அவருக்குப் பின்னர் பிரேமதாசா மாத்திரமே ஒருதடவை ஆட்சியைப் பிடிக்கமுடிந்ததே தவிர, அதற்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. தாம் கொண்டுவந்த அரசியலமைப்புச் சட்டமே தமக்கு சாவுமணி அடிக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நினைத்திருக்க முடியாது. இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக அதிகார சுகத்தை இழந்துபோயிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி இப்போது தாம் அறிமுகம் செய்த அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்றியமைத்தால் தான் தமக்கு விடிவு என்று சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றது.

அதனால்தான் கடந்த வாரம் புதிய அரசியலமைப்பு யோசனை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டு வைத்திருக்கிறார். தான் அதிகாரத்திற்கு வந்தால் புதிய அரசியலமைச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவேன் என்று கூறுகின்ற ரணில் தட்டித்தவறியேனும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவாரெனில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவாரா என்பது கேள்விக்குரியதே. கிடைக்கின்ற அதிகாரத்தை இழப்பதற்கு ரணிலைப் போன்ற ஒரு தலைவர் தயாராக இருப்பாரா என்பது ஒன்றும் சத்திரசிகிச்சை செய்து கண்டறியவேண்டிய ஒன்றல்ல.

ஐக்கிய தேசியக் கட்சி இந்தப் புதிய அரசியலமைப்பு யோசனையை அறிமுகம் செய்துவைத்த மறுகணமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் அதனை வரவேற்றிருக்கின்றார். கூட்டமைப்பின் சட்ட ஆலோசகர் போன்று செயற்பட்டுவரும் சுமந்திரன் அதனை வரவேற்ற மறுகணமே பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி அதனை நிராகரித்திருக்கின்றார் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களில் ஒருவருமான மாவை சேனாதிராஜா அவர்கள். சுமந்திரனின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்து என்றும் கூறியுள்ள சேனாதிராஜா அத்தோடு நின்றிருந்தாலும் பரவாயில்லை, ஒற்றையாட்சிக்குள் இனி தீர்வு இல்லை என்றும் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

ஏண்பதுகளில் அவரது அரசியல் தலைவர்கள் எப்படி தமிழ்மக்களை வழிநடத்தினார்களோ அதேபாணியில் தானும் தமிழ்மக்களை வழிநடத்தலாம் என்று மாவை நினைத்தாரோ தெரியவில்லை. அதுமாத்திரமல்ல, இன்னமும் நமது தலைவர்கள் அறுபதுகளில் இருந்த நிலையில் தான் இருக்கின்றார்கள் என்பதையும் அவர் அந்த பத்திரிகையாளர் சந்திப்பில் நிரூபித்திருக்கிறார்.

இன்னமும் மீள்குடியேற்றப்படாமல் ஒரு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் இருக்கிறார்கள் என்றும் அரசாங்கம் அனைத்து மக்களையும் மீள்குடியேற்றிவிட்டதாக பொய் கூறுகின்றது என்றும் மாவை தெரிவித்திருக்கின்றார். ஒரு பொறுப்புள்ள தலைவர், இதுபோன்ற அறிவிப்புக்களைச் செய்கின்றபோதாவது தரவுகளை வைத்துக் கொண்டு, எங்கு, எத்தனைபேர், எத்தனை குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், எந்த கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பவை போன்ற விபரங்களுடன் செய்திகளை வெளியிடவேண்டும் என்ற சாதாரண நடைமுறையைக் கூட பின்பற்ற நமது தலைவர்கள் இன்னமும் தயாராக இல்லை.அதுபோன்ற தகவல்களை கேட்டுப்பிரசுரிக்க வேண்டும் என்று ஊடகங்களும் கருதுவதில்லை. அவர் என்ன சொல்கின்றாரோ அதனை அப்படியே எழுதிவிடவே ஊடகங்களும் விரும்புகின்றன. அத்தோடு நின்றுவிடவில்லை அவர், இந்தியாவிலிருக்கும் தமிழ்மக்களையும் மீள்குடியேற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருக்கின்றார். முதலில் அவரும் அவரது பாராளுமன்ற சகாக்களும் தமிழகத்திலுள்ள தங்கள் தங்கள் குடும்பங்களை மீண்டும் அழைத்து வந்து மீள்குடியேற்றம் செய்யவேண்டும். அப்போதுதான் சாதாரண மக்கள் தத்தமது வீடுகளுக்கு திரும்புவார்கள்.

# 13வது திருத்தத்தை ஒழிப்பது முடியாத காரியம் என்கிறார் சித்தர்!

இலங்கை - இந்திய உடன்படிக்கையின் பிரகாரமே 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது. எனவே இதனை ஒழிப்பதென்பது இரு நாடுகளுக் கிடையேயான இராஜதந்திர உறவுகளை வேரறுக்கும் செயற்பாடாகும் என புளொட் தலைவர் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் தெரிவித்துள்ளார்.


அத்துடன் அரசாங்கத்துடன் இருக்கும் தமிழ் - முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டார்கள் என்றே நம்புகிறோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்திற்கு எந்த உறுப்பினராலும் தனிநபர் பிரேரணையொன்றை கொண்டு வரமுடியும். அதனை எவராலும் தடுக்க முடியாது.

அத்துடன் தனிநபர் பிரேரணையென்பது பாரிய வலுவானதொன்றல்ல. 13வது திருத்தம் என்பது இலங்கை - இந்தியா என்ற இரு நாடுகளுக்கிடையேயான இராஜதந்திர உறவுகளுக்கமைய பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு உடன்படிக்கை செய்து கொண்டுவரப்பட்டது.

எனவே இதனை ஒழிப்பதென்பது இரு நாட்டு உறவுகளையும் பாதிக்கும். அது மட்டுமல்லாது இதனை ஒழிப்பதற்காக பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் கிடைக்கப் போவதில்லை. அரசாங்கத்தோடு இணைந் திருக்கும் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, இவர்களுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களான டிலான் பெரேரா, ராஜித சேனாரத்ன போன்றவர் களும் இதற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள் என்பது அவர்களின் கடந்தகால கூற்றுக்களில் இருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

தமக்கு ஒரு நியாயமான தீர்வாக அதிகாரப்பரவலாக்கலையே தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஹெல உறுமயவின் தவிசாளரும், அதன் பாராளுமன்றக்குழு தலைவருமான அத்துரலியே ரத்னதேரர் அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தை ரத்துச் செய்யும் தீர்மானத்தை கொண்டு வந்ததன் மூலம் சிங்கள பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வினை வழங்கத் தயாரில்லை என்பதையே காட்டுகின்றது.



நிச்சயமாக இந்த நாட்டிலே இனவாதத்தைத் தூண்டும் ஒரு செயலாகவே இது பார்க்கப்படுகின்றது. இத்தனிநபர் பிரேரணை ஒருபோதும் வெற்றியடையப் போவதில்லை என புளொட் தலைவர் சித்தார்த்தன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 13ம் திருத்தச் சட்டம் ரத்து: நீதி அமைச்சர் மறுக்கிறார்!

13ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். 13ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்வது தொடர்பில் எவ்வித முனைப்புக்களும் காட்டப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குhணி, காவல்துறை அதிகாரங்கள் n;தாடர்பிலோ அல்லது 13ம் திருத்தச் சட்டம் தொடர்பிலோ நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 13வது அரசியல் திருத்தம்: கருத்துக் கணிப்பு?

13வது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பாரனரமான நிலைமை காரணமாக நாட்டு மக்களின் கருத்தை அறிவதற்காக அரசாங்கம், சுவிஸர்லாந்தின் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு முறைமை குறித்து ஆராய நடவடிக்கை எடுத்து வருகிறது என திவயின தெரிவித்துள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தும் தேவை ஏற்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில், சுவிஸ் நாட்டின் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு முறையை பயன்படுத்தி, இலங்கை மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டும் என சட்ட வல்லுநர்கள் அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த முறைமை குறித்து ஆராயும் பொறுப்பை அரசாங்கம் விசேட குழுவொன்றிடம் வழங்கியுள்ளது.

அதேவேளை கிளிநொச்சியை விட இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகளவான தமிழ் மக்கள் இருப்பதாகவும் இதனால் சபரகமுவ மாகாணம் காவற்துறை அதிகாரத்தைக் கோரினால் மேலும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக திவயின கூறியுள்ளது.

# 2017 தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி முறைக்கு முடிவு!

**-கோட்டே விகாராதிபதி கோரிக்கை!!**

2017 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை ஒழிக்கப்படல் வேண்டும் என்று கோட்டே சிறிநாகவிகாரை வண. மதுலுவெள சோபித்த தேரர் தெரிவித்தார். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை ஒழிக்கப்படாவிட்டால் எதிர்க் கட்சிகளின் கூட்டணியொன்று உருவாக் கப்பட்டு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொது எதிரணி வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார் என்றும் அவர் எச்சரித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

18 ஆவது திருத்தம் நீக்கப்படல் வேண்டுமெனவும் 17 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படல் வேண்டும் என்றும் தகவல் பெறும் உரிமை சட்டமூலம் கொண்டுவரப்படவேண்டும் என்றார்.

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுள்ள இந்த அரசாங்கம் தற்போதைய ஜனாதிபதி முறையை நீக்கவேண்டிய கடப்பாடு உடையது என்றும் அவர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENGLISH

# From Sheer Hatred To Stark Reality
# The true story of two former LTTE militants

By Camelia Nathaniel



Jayawardhani, Naganathan and their three children

Many young Tamil girls and boys having grown up with the war that plagued the country for over three decades have been idolising the terrorist outfit – the Liberation Tigers of Tamil Eelam (LTTE). Young Jayawardhani was no different, and her mind was poisoned with hatred propagated by the terrorists since it was so easy for the LTTE because she was an orphan at the Sencholai home for orphans.

ayawardhani never felt the warmth of a loving mother's hug and tenderness. Countless times she dreamed of that perfect life with a family, and could only wonder what life would have been like, had she not lost her parents. All she wanted was to live a life with people who cared about her.

All she ever wanted was to be free and happy. But life it seems never treated her fairly. The only family that Jayawardhani had ever known was the other orphans at the Sencholai Orphanage, and the LTTE. She received her education at the orphanage, which she is very grateful for.

Poisoned mind

She felt grateful to the LTTE for giving her a place to stay and educating her. Jayawardhani grew up to believe that the Sri Lankan army and the Sinhala people were cruel and unreliable. Her mind was poisoned with the notion that they were out to destroy the Tamils. The hatred persuaded her to later join the terrorist outfit and start a misguided journey to save the Tamil people. "The only family I knew was the other orphans at the home and the LTTErs were the heroes fighting to liberate my people. The only mother I knew was the lady who took care of us at the orphanage," she reminisced.

Having joined the LTTE she had fiercely fought against the government forces and did so with great pride and dedication. "I felt that I was fighting for a cause. I had never known anyone else in my life other than the children at the orphanage and later my fellow cadres. We were made to believe that the government forces, specially the army were brutal killers simply out to kill us."

For many other cadres, fighting for the LTTE was similar to Jayawardhani's, as they too were brainwashed and misguided by the LTTE. They too have a story to tell of how the former 'killing machines' of the LTTE turned innocent youth into killers.

She had later met a young man Sidambaranathan Naganathan senior to her in the terrorist organisation and the two of them fell in love. However their love affair was not looked upon favourably by the LTTE. "The terrorist leaders were of the opinion that if these cadres were to marry and raise families the organisation would not have the required manpower to battle. For Jayawadhani and Naganathan it was a long struggle that they finally were able to overcome. "However it was not a piece of cake and we had to each conduct our assigned missions successfully in order to have permission to enter wedlock. However we did what we had to do and finally got married and settled down in Murusumudai." They had their share of trials and tribulations, but they had somehow kept their marriage together.

Realising LTTE atrocities

As time went by, they had two children and Jayawardhani conceived their third son. Just like many others who had initially believed in the terrorists, her husband and she gradually saw the LTTE atrocities.

"I have seen the way they punished our fellow fighters if they dared to question the motives or actions of the terrorist leaders. I have also on several occasions seen them killing the very cadres who fought for their cause, but were unfortunate to have been left disabled having sustained injuries in battle. Even during the last stages of the war LTTE leaders destroyed many of their own cadres who were considered a burden on them," Naganathan recalled. These innocent people were caught up in a struggle that they eventually realised not for the liberation of the Tamil people, but for power. Many innocent civilians had been caught up amid an escalating war between the security forces and the LTTE. They had lost everything and their lives have been shattered. They finally started to realise that the LTTE had no good intentions and that the Tamil people were just pawns in the whole scheme that was to gain power for LTTE leaders.

During the latter stages of the war, the government troops had ordered the people in the LTTE controlled areas to go toward the government troops, said Jayawardhani. "Yet the LTTE cadres did not allow them to cross and they kept shooting at those who tried to cross over to the army controlled areas. The ones crossing the earth bund, which held thousands, and separated them from the real world, had the courage to do so sensing that real freedom was not with the terrorists as they had been made to believe, but beyond the earth bund. Those who crossed over were urging the others to follow via loudspeakers, and many of the people were crossing over, and denying the LTTE the opportunity of holding them as a human shield to prevent being attacked by the government troops," she said.

The government did whatever it took to rescue those being held as a human shield by the LTTE.

Human shield

The rebels on the other hand were enticing the government forces to commit mayhem on the civilians in the No Fire Zone to attract them the international attention and sympathy.

Almost 300,000 civilians were held under LTTE custody, which offered them protection from heavy Army gunfire or air raids, but allowed them the use of heavy weapons against government forces under the cover of the 'human shield'.

By this time Jayawardhani had given birth to her third son and she and her husband had decided to take their two older children and seven days old son and cross over to the government troops and surrender.

Jayawardhani was not the only one who experienced the LTTE's brutality. She had been a freedom fighter for them for many years; someone who had believed so passionately in their cause. However, once she felt the fragrance of real freedom beyond the earth bund, she wanted to go for it; but the LTTE who were supposed to be fighting for the freedom of Tamils were the very ones obstructing their freedom.

"My husband escorted me and my seven days old infant first and took us toward the earth bund to help me get across while he went back to get our other children. However, the LTTE fired at us and the last thing I knew was I felt something hitting my face," she said.

Naganathan says that the instant he saw his wife fall he ran toward her, but saw her motionless body in a pool of blood. "I thought that my wife was dead along with our baby. Yet when I turned to leave, I heard the infant make a sound and I picked it up and ran toward the army. The army soldiers took the injured baby from my arms and put into a helicopter and I did not know where they took the infant at the time," he recalled agonisingly.

Stark reminder

Somehow for Jayawardhani's luck the army had found her. Having found that she was still alive the army had transported her onboard a helicopter to Colombo. "I regained consciousness only after six months where the doctors had performed several surgeries on my face, as the blast had shattered part of it. I had lost one eye and my nose including several bones was shattered. I have no nose but the doctors have transplanted a piece of flesh from my thigh to construct my face. When I look at my face today in the mirror I am terrified at what I see, yet it is a stark reminder of what the very ones I trusted and believed in had done to me. I now realise that I was just a number, a part of the fighting machine, nothing more to the LTTE."

However Jayawardhani now views the army and the Sinhala people as her rescuers and her family. "Neither the army nor the government has valid reasons to save my life. Yet they struggled for six months to give me life and resurrect me from the dead. Contrary to the many allegations directed toward the army accusing them of theft and massacre, I am a good example of their kindness and love. I had lost my ring finger during the battle and you would not believe that the army soldiers who had found me had preserved my wedding ring on my lost finger and returned it to me after I regained consciousness," she said with immense gratitude toward her rescuers.

Jayawardhani's infant was taken to the Lady Ridgeway Hospital where the child was cared for during the time she was unconscious. "After I regained consciousness I told the hospital authorities that I had a seven-day-old infant born at the time of the attack. I had no idea if my son was alive or dead. Their records however indicated that the army had airlifted an infant to Colombo and that a motherless infant was receiving treatment at the children's hospital. After a DNA test, it was confirmed that the infant was mine and my little son was handed back to me.

I was moved beyond words at the sheer efforts taken by the Sinhala people to save me and my son, even today I cannot understand their generosity and kindness toward someone like me who had been intently out to destroy them. The magnitude of their kindness is far beyond my comprehension, as it had been a Sinhala doctor attached to the children's hospital, who also had a child at the time, breast fed my son too to keep him alive. How do I ever repay her, or the army for what has been done for me? No amount of words will ever be enough to express my gratitude toward them," she said.

The LTTE – the hypocrites

Jayawardhani says that she has nothing but hatred for most of the ex-LTTE leaders enjoying freedom today. "These are hypocrites who abandoned us and left us to die for carving their own way out," she added.

Today Jayawardhani and Naganathan live with their two children in Vadukkodai in Koddaikadu Jaffna, enjoying the freedom. Many other ex-LTTE cadres just like Jayawardhani and Naganathan are not forced today to do anything but live a life of peace. They are all now slowly rebuilding their shattered lives. Certain elements of the Tamil Diaspora whose children have all this time enjoying the comfort in foreign countries are now voicing their concerns for the Tamil people. Is it that they are doing so for their people or in fact for protecting their own interests to hold onto the privileges offered to them by these countries and prevent them from being sent back? They claim to be fighting for a separate land for the Tamil people, yet would any of them now domiciled in foreign countries ever give up their comforts and return to this country and live in this so called separate state that they say they want? No.

It is the people who have been caught up in the war that suffered the most. None of them want to go through that ever again. Never.

courtesy- sunday leader




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வேதாளம் முருங்கை மரத்திலா?

ஒற்றையாட்சி இலங்கைக்குள் தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வின் ஊடாக தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியும் என்ற நம்பிக்கை கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளியன்று 30 மே மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

1976ம் ஆண்டு தனி தமிழீழமே தீர்வு என்று வட்டுகோட்டை தீர்மானம் நிறைவேற்றியவர்கள் இந்த தமிழரசு கட்சியினர். அதற்காக இளம் சமூகத்தையே வன்முறைக்குள் தள்ளிவிட்டுவிட்டு தாம் அடுத்து வந்த 1977ம் ஆண்டு பாராளுமன்ற




தேர்தலில் தமிழீழத்துக்கு ஆணை தாருங்கள் எனக்கேட்டு தமிழீழத்தை வாக்கு சேர்க்கும் மலின அரசியலுக்காக விலை கூறி விற்றவர்களும் இந்த தமிழரசு கட்சியினர்தான் அதில் வென்று பாராளுமன்றம் சென்றபோது அங்கே "இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப் பாட்டையும் பாதுகாப்பதற்காக உழைப் பதோடு இலங்கையின் இறைமைக்கு விசுவாசமாக இருப்பேன் "என்று சத்தியம் செய்து விட்டு தமது எம்பி பதவிகளையும் சுகபோகங்களையும் காப்பாற்றி கொண்டவர்கள் இந்த தமிழரசு கட்சியினர்.

எனவே இப்போது மட்டும் மாவையார் பேசுவது ஒன்றும் நகைப்புக்கு உரிய விடயம் அல்ல.தமிழரசு கட்சியினர் எப்போதுமே இப்படி பேசி பேசியே தமது பதவிகளை மீண்டும் மீண்டும் காப்பாற்றி கொண்டவர்கள்.அந்த வகையில் தான் இப்போதும் மீண்டும் ஒற்றை ஆட்சிக்குள் தீர்வை ஏற்று கொள்ள முடியாது என்று மார்தட்டி பேசியுள்ளார். காலத்துக்கு காலம் சத்திய பிரமாணம் செய்து பாராளுமன்ற கதிரைகளை உறுதிப்படுத்திக் கொண்ட பின் தமிழ் மக்களிடையே வந்து இப்படி பேசுவது இவர்களுக்கு பழக்கப் பட்டு போனதொன்று .

அதுவும் தேர்தல் காலம் என்றால் மாவையார் மார்பு தட்டி பேசுவார்.வட மாகாண சபை தேர்தல் நெருங்க நெருங்க தமிழீழம் ஒன்றே எமக்கு தீர்வு என்று தமிழரசு கட்சியினர் பேசினாலும் ஆச்சரியபடு வதற்கில்லை.ஏனெனில் தமிழ் மக்கள் இலகுவாக உணர்ச்சிவயப்பட கூடியவர்கள். இல்லாவிட்டால் 50வருட கால பொய்யை இன்னும் சொல்லி கொண்டிருக்க இவர்களுக்கு எப்படி துணிவு வரும்.முதலில் சமஸ்டி என்றா ர்கள்.பின்னர் தமிழீழம் என்றார்கள்.பின்பு எல்லாம் முடிந்த பின்னர் மீண்டும் இலங் கையின் பாராளுமன்றத்துக்குள் இருந்து கொண்டு இப்போது ஒற்றை ஆட்சியை ஏற்றுகொள்ள முடியாது என பேசியுள் ளார்.

ஒன்று அரசியல் வாதிகள் திருந்த வேண்டும் இல்லாவிடில் மக்கள் திருந்த வேண்டும்.எமது இளம் சமுகம் இதுபற்றி தீவிரமாக சிந்தித்ததாக வேண்டிய தருணமிது.எதிர்வரும் வடமாகாண சபை தேர்தல் நெருங்க நெருங்க இது போன்ற பல கூத்துக்கள் அரங்கேற வாய்ப்புண்டு. எனவே எது சாத்தியம் எது போலியான கதையாடல்கள் என்பதையிட்டு எமது மக்கள் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். முதலில் கிழக்கு மாகாண சபையே வேண்டாம் என்றவர்கள் இந்த தமிழரசு கட்சியினர் இவர்களின் கதையின்படி அந்த மாகாண சபையை மக்கள் கோட்டை விட்டிருந்தால் இன்று வட மாகாண சபை பற்றி நாம் கதைக்கவே வாய்ப்பிருந்திருக்காது.முதலில் இருப்பதை பெற்று கொண்டு மேலும் அதிகாரங் களுக்காக போராடுவதுதான் சாத்தியமான ஒரே வழி.இல்லாவிடின் இறுதியாக மிஞ்சியிருக்கின்ற மாகாண சபைகூட எதிர்காலத்தில் இல்லாதொழிக்கப்படும் சாத்தியம் உண்டு.இப்போது பார்த்தோமானால் காணி போலிஸ் அதிகாரங்களை நீக்கிய ஒரு வட மாகாண சபையே உருவாக்கப்படும் சாத்தியங்களும் காணப்படு



கின்றன.இதற்கு காரணம் என்ன? கிழக்கு மாகாண சபை உருவாகும் போது அந்த

**மட்டுநகரிலிருந்து**
**எழுகதிரோன்**

மாகாண சபைக்குரிய அதிகாரங்களுக்காக எந்த தமிழ் தலைவர்களும் குரல் கொடுக்க வில்லை.தாம் விரும்பாத, தாம் ஏற்றுகொள்ளாத "பிள்ளையான் உருவாக்கிய மாகாண சபை "என்று யாழ்ப்பாண தலைவர்கள் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடந்து கொண்டதன் காரணமாகத்தான் போதிய அதிகாரங்கள் இல்லாத கிழக்கு மாகாண சபை போன்று வட மாகாண சபையையும் உருவாக்கி விடலாம் என்று அரசு எண்ணுகின்றது.

எனவே சாத்தியமில்லாத விடயங்களை பேசுவதை விடுத்து மக்களிடம் உண்மையை பேசி செயல்பட தமிழரசு கட்சியினர் முன்வரவேண்டும்.இல்லை உண்மை யிலேயே ஒற்றை ஆட்சிக்குள் தீர்வுகாண முடியாது என்பது உண்மையிலேயே தமிழரசு கட்சியினர் நம்புகின்ற கோட்பாடாக இருந்தால் உடனடியாக தமது பாராளுமன்ற பதவிகளை துறக்க முன்வரவேண்டும். ஒற்றை ஆட்சிக்குள் தீர்வுகாண முடியாது என்பது மறுதலையாக ஒரு சமஸ்டி ஆட்சி முறையை கோருவ தாகும்.அப்படியானால் இது சாத்தியமா? இருக்கின்ற மாகாண சபைகளுக்கே அதிகாரங்களை பெற முடியாதிருக்கின்ற நிலையில் சமஷ்டி என்பது கனவாகவே இருக்கும். இல்லாவிடின் 1949ம் ஆண்டு தமிழரசு கட்சியை ஆரம்பித்தபோது சொல்லப் பட்ட இந்த சமஸ்டி விளை யாட்டை இத்தனை அழிவுகளுக்கு பின்ன ரும் மீண்டும் பேசுவது எதற்காக? எதிர் வரும் வட மாகாண சபை தேர்தலில் மிக இலகு வாக மக்களை சூடேற்றி வாக்குகளை கவருவது ஒன்றே தமிழரசு கட்சியினரின் கள்ள நோக்கமாகும்.தமது பதவிகளுக்காக மக்களை மீண்டும் ஒருமுறை பலிக்கடா வாக்கவும் மாவை போன்றோர் தயக்கம் காட்டப் போவதில்லை.இது போன்ற பொறுப்பற்ற பேச்சுகளும் உசுப்பெற்ற ல்களுமே கடந்த காலங்களில் பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களை காவு கொள்ள காரணமாயிற்று. இதுபற்றி யெல்லாம் எவ்வித கவலையும் கொள்ளா தவர்கள் இந்த கூட்ட மைப்பினர். இவர்கள் தான் எமது மக்களின்வாழ்வை சீரழித்தவர்கள்.இத்தனை அழிவுகளுக்கும் காரண மானவர்கள் மீண்டும் ஒருமுறை வந்து எதுவும் நடவாதது போல இப்படி பேசுவதையிட்டு யாரும் கவலை கொள்வதில்லை,கண்டிப்பதுமில்லை.மக்கள் இந்த தமிழரசு கட்சி போலி வேட தாரி களை துரத்தியடிக்க முன்வரா விட்டால் மீண்டும் ஒருமுறை வேதாளம் முருங்கை மரத்திலேறும் பல்லாயிரம் உயிரற்ற உடல் களுடன். இது உங்களுக்கு சம்மதமா?

# இலங்கையின் தீவிரவாத முறியடிப்புக்கு அமெரிக்கா ஒத்துழைப்பை நிறுத்தியது!

இலங்கையுடனான தீவிரவாத முறியடிப்புக்கு ஒத்துழைப்பு மற்றும் பயிற்சிகளை அமெரிக்கா கடந்த ஆண்டில் மட்டுப்படுத்திக் கொண்டதாக அறிவித்துள்ளது.

இலங்கை படைகளால் கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட மனித உரிமைமீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் சட்டரீ தியாகவும், கொள்கை ரீதியாகவும், இந்த ஒத்துழைப்பை மட்டுப்படுத்துவதற்கு காரணமாகியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள 2012 ம் ஆண்டுக்கான தீவிரவாதம் தொடர்பான நாடுகளின் அறிக்கையிலேயே இது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

2009இல் தமிழ்ப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதி ஆதரவு வலையமைப்பு தொடர்ந்தும் இயங்கி வருவது குறித்து இலங்கை கவலை கொண்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினது என்று குற்றம் சாட்டப்படும் நிதி அமைப்புகளை இலக்கு வைத்து பல தீவிரவாத முறியடிப்பு செயற்பாடுகளை இலங்கை மேற்கொண்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

போர் நடைபெற்ற பிரதேசங்களில், இலங்கை 2012ம் ஆண்டில் பலமான இராணுவத்தை பராமரித்து வந்ததாகவும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மீள எழுச்சி கொள்ளும் சாத்தியம் குறித்து குரல் எழுப்பப்படுவதாகவும் அமெரிக்க அறிக்




கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் எச்சங்களை முற்றாக அழிப்பதற்கு சிறிலங்காவில் தீவிரவாத முறியடிப்பு சட்டங்களைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம், உள்நாடு பாதுகாப்புத் திணைக்களம், பாதுகாப்புத் திணைக்களம் போன்றவற்றுடன் சிறிலங்கா தனது கடல்சார் எல்லை பாதுகாப்பில் இணைந்து செயறபட்டுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தொடர்ந்தும் வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பாகவே இராஜாங்கத் திணைக்களம் பட்டியலிட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 'துக்ளக்' - 7

இலங்கையில் துக்ளக்

# முள்ளிவாய்க்காலில் நடந்தது என்ன?

கடந்த வாரத் தொடர்ச்சி

**இலங்கையில் ஆறு நாட்கள் தங்கி செய்திகள் சேகரித்த நமது நிருபர்கள் எஸ்.ஜே.இதயா மற்றும் ஏ.ஏ.சாமி ஆகியோர் இந்த இதழில் புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் அவர்கள் பார்த்தவற்றையும், பலரிடம் பேசியவற்றையும் பகிர்ந்து கொள்கிறார்கள்....**


புதுக்குடியிருப்பு நகரில் எங்களுக்குப் பேட்டியளித்த இளைஞர், ஒரு ஆம்புலன்ஸ் டிரைவர் குடும்பத்தைச் சந்திக்கச் சிபாரிசு செய்ததால், அந்தக் குடும்பத்தைத் தேடிக் கிளம்பினோம். வழியில் வேறு பலரையும் சந்தித்துப் பேசிய படியே தான் போனோம். ஒரு தேநீர் விடுதியில் நாங்கள் சந்தித்த சுமார் எழுபது வயதுப் பெரியவர் சொன்ன கருத்து குறிப்பிடத்தக்கது.

"போர் ஆரம்பித்த காலத்தில் நாங்களே பொடியன்களைத் (இளைஞர்களை) தட்டிக் கொடுத்தது உண்மை. ஆனால், காலப்போக்கில் உயிரிழப்புகள் அதிகமாக, அதிகமாக வேதனை எங்களை வாட்டத் துவங்கி விட்டது. எத்தனையோ பேச்சுவார்த்தைகளில் அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்று, புலிகள் போரை நிறுத்தியிருக்கலாம். ஆனால், அவர்கள் கடைசி நாள் வரை அதற்குத் தயாராக இல்லாமல் போய் விட்டார்கள். இதனால் கொத்து கொத்தாகத் தமிழர்கள் பலியாக வேண்டியதாயிற்று. இலங்கை ராணுவம் விமானம் மூலம் குண்டுகளை வீசி தமிழர்கள் பலரைக் கொன்றது உண்மை. ஆனால், புலிகள் நினைத்திருந்தால் அதைத் தவிர்த்திருக்க முடியும். 'எங்களுக்குத் தனி நாடே வேண்டாம். எங்களை விடுங்கள். நாங்கள் எங்காவது போய் பிழைத்துக் கொள்கிறோம்' என்று எத்தனையோ ஆயிரம் குடும்பங்கள் இயக்கத்தின் காலில் விழுந்து அழுதிருக்கின்றன. ஆனால், அவர்கள் மக்களை வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. அதனால்தான் சாவு எண்ணிக்கை அதிகமானது.

"நீங்கள் எல்லாம் போங்கள்.... ராணுவமா, நாங்களா என்று பார்த்து கொள்கிறோம்' என்று புலிகள் எங்களையெல்லாம் வெளியே அனுப்பி, சவால் விட்டிருந்தால், அது வீரப் போராட்டமாக இருந்திருக்கும். இவ்வளவு மக்கள் அழிந்திருக்கமாட்டார்கள். அதே நேரம், போரும் எப்போதோ முடிந்து போயிருக்கும். ஆனால், புலிகள் வலுக் கட்டாயமாக, மக்களைத் தங்களுக்கு அரணாக வைத்திருந் ததால் தான், பல்வேறு நாடுகள் இலங்கை ராணுவத்திற்குப் பல உதவிகள் செய்த நிலையிலும், இந்தப் போர் இத்தனை ஆண்டுகள் நீடித்தது. மக்கள் அரண் இல்லாமல் போயிருந்தால், புலிகளை இலங்கை ராணுவம் எப்போதோ ஒடுக்கி இருக்கும்.

"தங்கள் பிடியில் இருந்த பகுதிகளைச் சுற்றி புலிகள் கண்ணி வெடிகளைப் பதித்து விட்டனர். தங்கள் பகுதிகளில் புலிகளே வரிவசூல் செய்தனர். ஆனால், அரசாங்கம் அந்த பகுதியைச் சுற்றிலும் ராணுவத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு, அந்த ராணுவ வீரர்களுக்கு மட்டுமல்லாமல், புலிகள் பகுதியிலுள்ள எங்களுக்கும் உணவு அனுப்ப வேண்டும், அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் அனுப்ப வேண்டும் என்றால் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் செய்வார்கள்? பல தமிழர் அமைப்புகள் அரசியல் தீர்வை நோக்கி நகர்ந்தபோது, புலிகளும் அப்படி நகர்ந்திருக்க வேண்டும். இப்போது ராணுவத்தை மட்டும் குறை சொல்லிப் புலம்புவதில் அர்த்தமில்லை" என்றார் அவர். அவர் குடும்பத்தில் எல்லோருமே போரில் இறந்துபோன நிலையில், அவர் மட்டுமே தனிமையில் வசிப்பதாகச் சொன்னபோது கலக்கமாக இருந்தது.

புதுக் குடியிருப்பு நகருக்கு வெகு அருகில்தான், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் வாழ்ந்த பங்கர் (பாதாள) வீடு இருக்கிறது. அந்த வீட்டைப் பார்வையிடச் சென்றோம். காட்டில் அடர்ந்த மரங்களை வெட்டி ராணுவம் தற்போது பாதை அமைத்துள்ளது. இரு



புறங்களிலும் கம்பி வேலி கட்டி கண்ணி வெடிக்கான எச்சரிக்கைப் பலகைகளையும் நட்டு வைத்துள்ளனர். பிரபாகரன் வாழ்ந்த அந்த வீட்டை, கேன்டீன் மற்றும் டாய்லெட் வசதிகளோடு தற்போது சுற்றுலாத் தலமாக மாற்றியுள்ளது இலங்கை அரசு. நாங்கள் சென்றபோது, ஒரு பள்ளிக்கூடத்துக் குழந்தைகள் பஸ்ஸில் வந்து அந்த வீட்டைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாண தமிழ்க் குடும்பத்தினர் சிலரும் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.

மேலே ஒரு பெரிய ஹால் போல சும்மா இருக்கிறது ஒரு வீடு. டார்க் பச்சை மற்றும் லைட் பச்சை நிறங்களில் சின்ன சின்ன பிட் துணிகள் கொண்டு பொறுமையாகத் தொடுக்கப்பட்ட ஒரு வலை, அந்த வீட்டின் கூரை மீது விரித்து விடப்பட்டிருக்கிறது. (மேலே இருந்து பார்த்தால் மரம் மற்றும் புதர் போல் தெரியுமாம்.) அந்த ஹாலுக்குக் கீழே பூமிக்குள் மூன்று தளங்களில் இருக்கிறது பிரபாகரனின் வீடு. காரை கீழேயே ஓட்டிச் சென்று 'பார்க்' செய்யும் வகையில் அண்டர் க்ரௌண்ட் கார் பார்க்கிங்கும் இருக்கிறது. குண்டு விழுந்தாலும் இடியாத வண்ணம், பூகம்பம் வந்தாலும் உடையாத வண்ணம், பூமிக்குள் இருக்கும் அந்த வீட்டின் சுவர்கள் ஒவ்வொன்றும் மூன்றடி கனத்தில் உள்ளன.

வழக்கமான படிக்கட்டுப் பாதை போக, அவசரத்திற்கு தப்பித்து வெளியே செல்ல, கீழே உள்ள மூன்றாவது தளத்திலிருந்து தனி ஏணிப்பாதை ஒன்றும் உள்ளது. வீட்டைச் சுற்றி நான்கு இடங்களில் காவல் நாய்களின் கூடாரம். அதை அடுத்து நான்கு இடங்களில் மனித வெடிகுண்டு காவலாளிகளின் கூடாரம். அதைச் சுற்றி 12 அடி உயரத்திற்கு மின் கம்பி வேலி. அதற்கு வெளியே மேலும் நான்கு காவல் கூடாரங்கள். அதையடுத்து மற்றொரு கம்பி வேலி. அதற்கு வெளியே பல மீட்டர்களுக்கு கண்ணி வெடிகளைக் கொண்ட ஏரியா. இவ்வளவு பாதுகாப்புக்கு நடுவே இருந்திருக்கிறது பிரபாகரனின் அந்தப் பாதாள வீடு. இதையெல்லாம் சுற்றுலாப் பயணிகளுக்கு விளக்கிச் சொல்ல ராணுவ வழிகாட்டி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். 'பொதுமக்களும், சாதாரண விடுதலைப் புலிகளும் வெளியே புல்லட்களுக்குப் பலியாகியபடி இருக்க, அதன் தலைவர் மட்டும் எப்படி பாதுகாப்பாக இருந்தார் பாருங்கள்' என்று மக்களுக்கு உணர்த்தவே, இந்தப் பங்களாவை ராணுவம் சுற்றுலாத்தலமாக்கி இருப்பதை யூகிக்க முடிகிறது.

அதன் பின் நாங்கள் புதுக்குடியிருப்பு நகரிலிருந்து முல்லைத் தீவு நோக்கிப் பயணமானோம். போகும் வழியில் புறநகர் பகுதியில் (ஏறக்குறைய இறுதிப்போர் நடந்த பகுதியின் அருகில்), புதுப் புது வீடுகள் காணப்பட்டதையொட்டி, அங்கு சென்று விசாரித்தோம். ஒரு வீட்டில் கணவன் இல்லாமல் இரு குழந்தைகளோடு ஒரு பெண் வசித்து வந்தார். அவரோடு பேசினோம். "வீடில்லாமல் தவித்த எனக்கு ராணுவமே வீடு கட்டிக் கொடுத்துள்ளது" என்று குறிப்பிட்ட அவரிடம், போர்க் காலம் குறித்து விசாரித்தோம்.

"போர் நடந்த காலங்களில் இயக்கத்தில் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள் என்று, பல வருடங்கள் நான் வீட்டை விட்டே வெளியே போகாமல் இருந்தேன். என் அம்மா ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் பிடித்து எனக்குத் திருமணம் செய்து வைத்தார். திருமணம் ஆனதும் 'எப்படா கர்ப்பிணி ஆவோம்' என்று ஆவலாகக் காத்திருந்தேன். ஏனென்றால், கர்ப்பிணி என்றால் நான் தைரியமாக வெளியே சென்று வரலாம். இயக்கத்தினர் பிடித்துச் செல்ல மாட்டார்கள். நான் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியும். அதே போல், கர்ப்பம் தரித்து நான்கு மாதங்களுக்குப் பிறகு வெளியே செல்ல ஆரம்பித்தேன். அப்போதும் இயக்கத்தினர் என்னைத் தடுத்து நிறுத்தி விசாரித்தனர். கர்ப்பிணி என்று நம்பிய பிறகுதான் அனுப்பி வைத்தனர்.

குழந்தை பிறந்த பிறகு கைக்குழந்தையுடன் வெளியே செல்வேன். பிரச்னையிருக்காது. குழந்தை வளர, வளர குழந்தையை என் அம்மாவிடம் பிடுங்கிக் கொடுத்து விட்டு, என்னை மீண்டும் பிடித்துச் சென்று விடுவார்களோ



என்ற பயம் வந்து விட்டது. இதனால், மீண்டும் கர்ப்பம் தரித்தேன். மீண்டும் சுதந்திரமாக வலம் வந்தேன். ஆனால், இயக்கத்தினர் என் கணவரைத் தேடத் துவங்கி விட்டனர். இதனால் அவர் எங்கள் வீட்டிலிருந்து தப்பி ஓடி விட்டார். இன்று வரை அவர் என்னிடம் வரவில்லை" என்று கண் கலங்கினார்.

அருகில் இருந்த ஒரு வயதான பெண்மணியிடம்

(7ம் பக்கம் பார்க்க)

## இந்தியா தரும் பணத்தில் ஊழலா?

'இலங்கைத் தமிழர் புதிதாக வீடு கட்டிக் கொள்வதற்காக இந்தியா கொடுக்கும் பணத்தை இலங்கை அரசு வறையாடுகிறது. அந்தப் பணத்தில் சிங்களருக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. அந்தப் பணத்தை வேறு தேவைக்களுக்கு இலங்கை அரசு பயன்படுத்துகிறது' என்றெல்லாம் இங்கு குற்றச்சாட்டுகள் வைக்கப்படுகின்றன. இது குறித்து நாங்கள் இந்தியத் தூதரக வட்டாரத்தில் விசாரித்தோம். "முதலில் ஆயிரம் பேருக்கு மட்டும் ஒரு ஏஜென்ஸி மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க முடிவு செய்யப்பட்டது. அதன் பிறகு, அதில் பலவிதமான குற்றச்சாட்டுகள் எழ வாய்ப்பிருந்ததால், நேரடியாக பயனாளியின் வங்கிக் கணக்கிலேயே 5.5 லட்ச ரூபாயை படிப்படியாக வரவு வைக்க முடிவு செய்யப்பட்டு விட்டது. அதன்படி, தற்போது இந்திய அரசே நேரடியாக தமிழ் பயனாளிகளுக்கு பணம் கொடுக்கிறது. இதில் எந்த ஊழலோ, லஞ்சமோ, தரக் குறைவோ ஏற்பட வாய்ப்பே இல்லை" என்றார் ஒரு தூதரக அதிகாரி. அதே போல், இந்தியா அமைத்துக் கொடுக்கும், ரயில் பாதையையும் இந்திய ஒப்பந்தக்காரரைக் கொண்டே செய்யப்படுகிறது. இலங்கை அரசிடம் பணத்தை நேரடியாகக் கொடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. சீனாவும் தனது தரப்பு உதவியான நெடுஞ்சாலை அமைக்கும் பணியை, தங்கள் நாட்டு ஒப்பந்தக்காரர் மூலம், தனது ஊழியர்களைக் கொண்டே செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 'துக்ளக்' - 7

# முள்ளிவாய்க்காலில் நடந்தது என்ன?

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பேசியபோது, "இந்தியாதான் எனது வீட்டைக் கட்டித் தருகிறது. இலங்கை பணத்தில் 5.5 லட்ச ரூபாய் (இந்திய மதிப்பில் சுமார் 2.5 லட்சம் ரூபாய்) கொடுக்கிறார்கள். நாங்களே கட்டுமானப் பொருட்களை வாங்கி, கொத்தனார் வைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும். நாம் கட்டக் கட்ட, தவணை முறையில் பணம் கொடுப்பார்கள். மணல் விலைதான் அதிகமாக உள்ளது. நாங்களே சித்தாள் வேலை பார்ப்பதால், இத்தொகைக்குள் கட்ட முடிகிறது. ஆடம்ப ரமாகக் கட்ட முடியாது. அடிப்படை வீடு ஒன்றையாவது கட்டிக் கொள்ள முடிகிறதே, அந்த வகையில் இந்தியாவுக்கு நன்றி சொல்ல வேண்டும்" என்றார் அந்த வயதான பெண்மணி.

இதன் மூலம் 'இந்தியா தருகிற பணம் கொள்ளை போகிறது' என்று தமிழகத்தில் சிலர் வைக்கும் குற்றச்சாட்டும் பொய்யானது என்பது தெரிகிறது.

இதையடுத்து, நாங்கள் முள்ளிவாய்க்காலை நோக்கிக் கிளம்பியபோது, வழியில் தண்ணீருக்கு நடுவே ஒரு பிரம்மாண்டமான நினைவுச் சின்னம் காணப்பட்டது. போரின் வெற்றியை அறிவிக்கும் வகையில் இலங்கை அரசு அந்த நினைவுச் சின்னத்தை எழுப்பியுள்ளது. அருகிலேயே, புலிகளிடமிருந்து கைப்பற்றிய வாகனங்கள் மழையிலும், வெயிலிலும் காய்ந்து கருவாடாய்க் கிடக்கின்றன. அந்த நினைவுச் சின்னத்தை அடுத்து, புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்களும், தற்கொலைப் படகுகளும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இலங்கை குறித்த ஒரு புகைப்படக் கண்காட்சியும் அங்கு இருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் சுதந்திரமாக வந்து பார்வையிடுகிறார்கள்.

இதையடுத்து, நந்திக்கடல் காயல் (லகூன்) கரையோரமாக முள்ளி வாய்க்கால் பகுதிக்குப் போனோம். வீடுகள் அதிகம் கண்ணில்படவில்லை. அப்பகுதியின் கடற்கரையில் ஒரு பாழடைந்த கப்பல் காணப்பட்டது. அருகே ஒரு ராணுவ கேன்டீனும் இருந்தது. அங்கு தேநீர் அருந்தியபடி, அந்தக் கப்பல் குறித்து விசாரித்தோம். "இந்த இடம்தான் போர் 100 சதவிகிதம் நிறைவுக்கு வந்த இடம். கடைசியாக மிஞ்சியிருந்த ஒரு சில விடுதலைப் புலிகள், இந்தக்



கப்பலுக்குள் ஒளிந்து கொண்டு சுட்டுக் கொண்டே இருந்தார்கள். அவர்களைக் கொன்று ராணுவம் போரை நிறைவு செய்தது" என்றார்கள் அங்கிருந்தவர்கள். அந்த கப்பலைப் பற்றி விசாரித்தபோது, "பல ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக் கடல் பகுதியில் ரிப்பேராகி நின்ற இந்த வெளி நாட்டுக் கப்பலை, விடுதலைப் புலிகள் இழுத்துக் கொண்டு வந்துவிட்டனர். இதிலிருந்த எஞ்ஜின்கள், இதர பாகங்களை கொஞ்சம் கொஞ்சமாகக் கழற்றித் தங்களது படகுகளுக்குப் பயன்படுத்தி வந்தனர்" என்று தெரிவித்தனர்.

இதன்பின், நாங்கள் முல்லைத் தீவுக்குப் போய் அங்கிருந்த தமிழர்கள் சிலரிடம் பேசினோம். கடைசி நாள் போர் குறித்து அவர்கள் விவரித்தனர். "முள்ளிவாய்க்கால் பகுதியில் நாங்கள் புலிகளுடன் சிக்கிக் கொண்டோம். அவர்கள் எங்களை வெளியே அனுப்புவதாக இல்லை. ராணுவமோ புதுக்குடியிருப்புப் பகுதி வழியாகவும், முல்லைத் தீவு வழியாகவும் எங்களை நெருங்கி விட்டது. இருபுறம் ராணுவம். கீழ்புறம் கடல், மேல்புறம் நந்திக் கடல் காயல். எங்கும் தப்ப முடியாது. உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கையே போய் விட்டது. அந்த நேரத்தில் இலங்கை ராணுவம் எப்படியோ கடல்பகுதிக்கு முன்னேறி வந்து, அங்கிருந்தபடி புலிகளைத் தாக்கத் துவங்கியது.




இதனால் நாங்கள் நந்திக்கடல் மீதான குறுகிய பாலத்தின் வழியாகத் தப்பி முல்லைத் தீவை நோக்கி ஓடி வந்தோம். "முதலில் எங்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்திய ராணுவம், பிறகு நாங்கள் பொதுமக்கள் என்பது தெரிந்ததும் நிறுத்திக் கொண்டது. பலர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பயந்து காயலில் விழுந்து தப்பிக்க நினைத்து உயிரிழந்தனர். பொதுமக்கள் வெளியேறியதும், ராணுவம் முழுமையாக அந்தப் பகுதிக்குள் புகுந்து போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. கடைசி நாள் போரில், புலிகளோடு சேர்ந்து நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இறந்து போனாலும், எங்களைப் போன்ற ஆயிரக்கணக்கான மக்கள் தப்பித்து இன்று உயிரோடு இருப்பது நம்ப முடியாத அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்" என்று விவரித்தார்கள் அவர்கள். அந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்லும்போதே, அவர்கள் கண்களில் ஒருவிதமான பீதியைப் பார்க்க முடிந்தது.

இதன் பின் நாங்கள், அந்த ஆம்புலன்ஸ் டிரைவரது குடும்பத்தைச் சந்திக்கச் சென்றோம். கணவன், மனைவி, இரு மகன்கள் அடங்கிய குடும்பம் அது. மூத்த மகன் இடது காலில் செயற்கைக் கால் பொருத்தியிருந்தார். அந்த டிரைவரிடம் நாங்கள் பேச்சுக் கொடுத்தோம். "நான் அரசு வைத்தியசாலையில் ஆம்புலன்ஸ் டிரைவராகப் பணியாற்றுகிறேன். பத்து வருடங்களுக்கும் மேலாக புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருந்தேன். போரில் காயம்படும் புலிகளை உடனுக்குடன் கொண்டு வந்து மருத்துவமனையில் சேர்ப்பது என் பணி. எத்தனையோ ஆயிரம் புலிகளை அப்படி நான் காப்பாற்றியிருக்கிறேன். எனக்கு இரு ஆண் குழந்தைகள், ஒரு பெண் குழந்தை. அந்தக் குழந்தைகள் வளர வளர, எனக்குப் பயம் வரத் துவங்கியது. இயக்கத்தினரிடம் சென்று என் குடும்பத்தை வெளியே அனுப்பி விடுமாறு கெஞ்சினேன். நான் அவர்களுக்குச் செய்த உதவிகளை நினைத்து அவர்கள் மனமிரங்குவார்கள் என்று நம்பினேன். ஆனால், அவர்கள் உடன்படவில்லை.

"அதன் பின் கொஞ்ச நாள் கழித்து மீண்டும் அவர்களிடம் 'நான் இங்கு இருந்து உங்களுக்கு ஊழியம் செய்கிறேன். என் மனைவி, குழந்தைகளை மட்டும் வெளியே அனுப்பி விடுங்கள்' என்று கெஞ்சினேன். அதற்கும் அவர்கள் சம்மதிக்கவில்லை. மாறாக, என் கழுத்தில் துப்பாக்கியை



வைத்து அழுத்தி, 'உயிர் மேல் உனக்கு அவ்வளவு ஆசையா?' என்று மிரட்டினார்கள். அதன் பின் ஒருநாள் விமானப் படைத் தாக்குதல் சமயத்தில், பதுங்கு குழியில் என் மனைவியும், குழந்தைகளும் ஒளிய நேர்ந்தபோது, மண் சரிந்து விட்டதால் என் மகள் உயிரோடு மண்ணில் புதைந்து இறந்து போனாள்" என்று கண் கலங்கியபடி, தனது செல்ஃபோனிலிருந்த தனது மகளின் வால்பேப்பர் ஃபோட்டோவைக் காட்டினார்.

"மீண்டும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு இயக்கத்தினரிடம் போனேன். நான் இறுதி வரை உங்களோடு இருக்கிறேன். தயவு செய்து என் குடும்பத்தை மட்டும் வெளியே அனுப்பி விடுங்கள் என்று கெஞ்சினேன். அவர்கள் என்னைப் பலவந்தமாகத் துரத்தியடித்தனர். அதோடு மறுநாளே என் வீட்டிற்கு வந்து, என் மூத்த மகனைப் பார்த்து விட்டு, அவனைத் தங்களோடு அழைத்துச் சென்று விட்டனர். நானும் என் மனைவியும் அவர்கள் காலில் விழுந்து கெஞ்சினோம். இப்போதுதான் ஒரு மகளை இழந்திருக்கிறோம். என் மகனை விட்டு விடுங்கள் என்று கெஞ்சியபோது, மறுபடியும் துப்பாக்கியைக் கழுத்தில் வைத்து மிரட்டி விட்டுச் சென்றனர். நாங்கள் அழுதபடியே வீட்டில் இருந்தபோது, என்னை வலுக்கட்டாயமாக ஆம்புலன்ஸ் ஓட்ட அழைத்துச் சென்று விட்டனர். இயக்கத்துக்குப் போன என் மகன் ஓரிரு நாளில் தப்பி வந்து விட்டான். ஆனால், அவனை நாங்கள் ஒளித்து வைக்கும் முன்பாகவே, மீண்டும் வந்து பிடித்துக் கொண்டு போய் விட்டனர்.

"அடுத்த முறையும் அவன் தப்ப முயன்றிருக்கிறான். அப்போது கோபமாகி அவன் காலில் சுட்டு விட்டனர். முழங்காலுக்குச் சற்று மேலே பாய்ந்த குண்டு மறுபுறமாக வெளியே வந்து விட்டது. நானே என் மகனை எனது ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்குக் கொண்டு வர வேண்டியதாகி விட்டது. அப்போது இலங்கை அரசின் ரெட் க்ராஸ் கப்பல் முல்லைத் தீவிற்கு அடிக்கடி வரும். காயம்பட்டவர்களை அதில் எடுத்துக் கொண்டு போவார்கள். புலிகள்தான் அதற்குப் பாஸ் வழங்கி, கடும் காயம்பட்டவர்களை ரெட் க்ராஸ் ஆட்களிடம் ஒப்படைப்பார்கள். என் மகன் சுடப்பட்ட நேரத்தில் ரெட் க்ராஸ் கப்பல் வந்ததால், என் மகனை அவர்களிடம் ஒப்படைக்கச் சொல்லி இயக்கத்தினரிடம் மன்றாடினேன். ஆனால், அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. 'புல்லட் தான் வெளியே வந்து விட்டதே? பிறகென்ன? இங்கேயே வைத்தியம் பார்த்துக் கொள்ளலாம்' என்று கூறி விட்டனர். ஆனால், இங்கே பார்த்த வைத்தியம் கைகூடவில்லை. உள்ளே நரம்புகள் அழுகிப் போனதாகக் கூறி, ஓரிரு நாட்களில் அவனது காலையே வெட்டி எடுத்து விட்டார்கள்.

"நான் அழுது ஆர்ப்பாட்டம் செய்தேன். அதன் பிறகு எனது மனைவியையும், எனது இளைய மகனையும் மட்டும் கப்பலில் அனுப்பி வைக்கச் சம்மதித்தனர். அவர்கள் வெளியேறினார்கள். போரின் இறுதி கட்டத்தில்தான் நான் என் மூத்த மகனைத் தூக்கிக் கொண்டு ரிஸீவிங் பாயின்ட்டிற்கு ஓடி ராணுவத்திடம் தஞ்சம் புகுந்தேன். விடுதலைப் புலிகள் மாதிரி அரக்கர்களை உலகில் எங்கும் பார்க்க முடியாது. அவர்கள் தலைமையில் ஒரு தனி நாடு அமைந்திருந்தால், அதுதான் உலகத்திலேயே கொடூரமான நாடாக அமைந்திருக்கும்" என்றார் அந்த ஆம்புலன்ஸ் டிரைவர் ஆக்ரோஷமாக. "தோற்கப் போகிறோம் என்று உணர்ந்த நாள் முதலே, அவர்கள் மிருகத்தனமாக மாறி விட்டார்கள்" என்றார் அவரது துணைவியார். அந்தக் காலை இழந்த இளைஞன் இன்னமும் மன அதிர்ச்சியிலிருந்து முழுமையாக மீளவில்லை.

இப்படித்தான் விடுதலைப் புலிகளுக்கு எதிராக, வட மாகாணத்தின் பல பகுதிகளில் பல சோகக் கதைகள் வெடித்து வருகின்றன. ஆனால், இந்த உண்மைகளை முதலில் உள்வாங்கிக் கொள்ள மறுக்கும் சிலர், உடனே 'அப்படியானால் இலங்கை ராணுவ வீரர்கள் எல்லாம் உத்தமர்களா?', 'ராஜபக்ஷ என்ன மகாத்மாவா?' என்று தான் அவசர அவசரமாகக் கேள்வி எழுப்புகிறார்கள். 'ராஜபக்ஷ அரசு மீது எந்தத் தவறுமே இல்லையா?' என்ற கேள்விக்கு அடுத்த இதழில் பதில் தேடுவோம்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்கடத்தல்களை கண்டிக்கிறது சிறிலங்கா அரசு! ஐநாவில் பதில்!!

சகலவிதமான ஆட்கடத்தல் நடவடிக்கைகளும் கண்டிக்கப்பட வேண்டுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.
சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொள்கைகளுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.
ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை இந்த கருத்தை வெளியிட்டுள்ளது.
ஆட்கடத்தல் நடவடிக்கைகள், இலங்கையில் பாரிய குற்றச் செயலாக கருதப்படுவதாகவும், கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.
2006ம் ஆண்டு 16ம் இலக்க குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் கடத்தப்படுவதற்கு எதிராக சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கவும், எதிராக நடவடிக்கை எடுக்கவும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு முதலாவது செய்மதி: சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம்!

இலங்கைக்கு அதன் முதலாவது தொடர்பாடல் செய்மதியை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் சீனாவின் கிரேட் வோல் கைத்தொழில் கூட்டுத்தாபனம் கையொப்பமிட்டுள்ளது.



உலக சந்தையில் வர்த்தக செய்மதிகளை ஏவுவதற்கான சேவையை வழங்க அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரேயொரு நிறுவனமாக கிரேட் வோல் கைத்தொழில் கூட்டுத்தாபனம் உள்ளது. இந்த ஒப்பந்தம் இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தை மேலும் அதிகரிக்கும். இந்த ஒப்பந்தம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது. ஆயினும் இந்த உடன்படிக்கை தொடர்பாக நிதி மற்றும் வேறு விடயங்கள் வெளியிடப்படவில்லை. இந்த செய்மதி இலங்கைக்கும் அதன் அயல் நாடுகளுக்கும் தொலைத்தொடர்பு மற்றும் ஒலி, ஒளிபரப்புச் சேவைகளை வழங்கும். பல நாடுகள் இலங்கையிடமிருந்து இந்த சேவைகளை வாங்குவதற்கு விருப்பம் கொண்டுள்ளன என சீன பத்திரிகை ஒன்று கூறியுள்ளது.இதுவரையில் 18 நாடுகளுக்கு 43 செய்மதிகளை ஏவிக்கொடுத்துள்ளதாக இந்த சீன கம்பனி கூறியுள்ளது. 2015ஆம் ஆண்டளவில் உலக செய்மதி சந்தையில் 10 சதவீதத்தை பிடிக்க சீனா எண்ணியுள்ளது என இந்தக் கம்பனி கூறியுள்ளது.

## சீன வங்கித் தலைவரும் ஜனாதிபதியை சந்தித்தார்!

சீனாவிற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் சீன அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஹு ஹுவாய்பேங்கும் (Hu Huuabang) இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.
இந்த சந்திப்பின் போது கருத்து தெரிவித்த சீன அபிவிருத்தி வங்கியின் தலைவர், வெளிநாடுகளுக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்காக எமது வங்கி நிதி உதவி வழங்கும் போது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவும் போது இலங்கைக்கே முதலிடம் வழங்குவதாக உறுதியளித்தார்.
தமது வங்கியுடன் இலங்கை மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்ட செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த சீன அபிவிருத்தி வங்கியின் தலைவர், எதிர்காலத்திலும் இலங்கைக்கான இந்த ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கப்படும் என குறிப்பிட்டார்.
பீஜிங் நகரில் செய்துகொள்ளப்பட்ட பல ஒப்பந்தங்களிலும் தமது வங்கியும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பாக கொழும்பு - யாழ்ப்பாணம் அதிவேகப்பாதை அமைப்புக்கும் சீன அபிலிருத்தி வங்கி உதவியளிக்குமென தெரிவித்தார்.
இந்த சந்திப்பின்போது மேற்படிவங்கியின் பணிப்பாளர் நாயகம் சேன்ட் லின்வூ (Zhang Linwu) உட்பட சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துக் கொண்டனர்.

## இலங்கை சீன உறவால் வேறுநாடுகளுக்கு பாதிப்பில்லை!

### அமைச்சர் பீரிஸ் விளக்கம்!!

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான தொடர்புகள் காரணமாக வேறு நாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாது என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.இரண்டு நாடுகளும் இடையில் நிலவும் நட்புறவு ஊடாக வேறு எந்த பலம்பொருந்திய நாட்டுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும் எண்ணம் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார். பீஜிங் நகரில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.இலங்கை, உலகில் உள்ள ஏனைய நாடுகளுடனும் நட்புறவுகளை கொண்டுள்ளது. இலங்கையுடனான நட்புறவை பயன்படுத்தி, ஏனைய நாடுகளில் பாதிப்புகளை ஏற்படுத்த சீன எதிர்பார்க்கவில்லை. போருக்கு பின்னர், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக சீனா பல வகையில் உதவியுள்ளது எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.4 நாள் விஜயமாக சீனா சென்றுள்ள, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன், அமைச்சர் பீரிஸூம் சீனாவுக்கு சென்றுள்ளார்.

## இராணுவ முகாம்களின் இடம் மாற்றம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதியிலுள்ள இராணுவ முகாம்களில் பெரும்பாலானவற்றை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக இராணுவம் கூறியுள்ளது.



ஏற்கெனவே உள்ள பதினாறு முகாம்களிலிருந்து பல முகாம்கள் பலாலி நிரந்தர முகாமுக்கு கொண்டு செல்லப்படும் என்றும் இராணுவம் அறிவித்துள்ளது.
தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த பகுதிகளில் மூன்று முகாம்கள் மட்டுமே இருக்கும் என்றும் இராணுவப் பயன்பாட்டிலுள்ள தனியார் நிலங்களுக்கு இராணுவம் வாடகை செலுத்திவருகின்றது என்றும் இராணுவப் பேச்சாளர் றுவான் வணிகசூரிய தெரிவித்தார்.
இதேவேளை, பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றின் விஸ்தரிப்புகளுக்கு தேவையான நிலத்தை வழங்குமாறு இராணுவம் காணி அமைச்சரிடம் கேட்டுள்ளது.
இதற்காக இராணுவத்திற்காக மேலதிகமாக 6000 ஏக்கர் நிலத்தை பொறுப்பேற்கும் செயன்முறையை அரசாங்கம் தொடங்கவுள்ளது. அத்துடன் காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## டாக்டர் ஜெயலத்தின் இடத்திற்கு கம்பஹா மாஜி மேயர் நியமனம்!

ஐக்கிய தேசியக் கட்சியின் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தனவின் வெற்றிடத்திற்கு மேல் மாகாண சபை உறுப்பினரும் கம்பஹா மாவட்டத்தின் முன்னாள் மேயருமான அஜீத் மன்னப்பெரும நியமிக்கப்படுவார் என ஐ.தே.க. தகவல்கள் தெரிவிக்கின்றன.
2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட முடிவுகளின்படி ஐ.தே.க.வின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் பட்டியலில் மேல் மாகாண சபை உறுப்பினர் அஜீத் மன்னப்பெரும அடுத்தபடியாக கூடிய விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார்.

## டாக்டர் ஜெயலத் காலமானார்!

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன காலமானார். சிங்கப்பூர் மருத்துவ மனையில் கடந்த வாரம் வியாழக்கிழமையன்று காலை காலமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறக்கும் போது அன்னாருக்கு வயது 60 என்பது குறிப்பிடத்தக்கது.



கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான ஜயலத் ஜயவர்தன கட்சியின் மிக முக்கியமான பல பதவிகளையும், அமைச்சுப் பொறுப்புக்களையும் வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
சிங்கப்பூர் மருத்துவ மனையில் சத்திரசிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட்ட போது ஜயலத் ஜயவர்தன காலமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான துவேச உணர்விலிருந்து உறுதியான யதார்த்தத்தை நோக்கி: இரண்டு முன்னாள் தமிழீழ விடுதலை புலிப் போராளிகளின் உண்மைக் கதை!

## ஜெயவர்த்தினி, நாகநாதன் மற்றும் அவர்களின் மூன்று பிள்ளைகள்



பொது மக்கள்மீது வன்முறையை பிரயோகிக்க அரசாங்கப் படைகளை தூண்டி

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக யுத்தத்தினால் ஒடுக்கப்பட்ட நாட்டில் பயங்கரவாத அமைப்புகளை சேர்ந்தவர்களை - தமிழீழ விடுதலை புலிகளை (எல்.ரீ .ரீ .ஈ) - தமது உதாரண புருஷர்களாக கொண்டு அநேகமான தமிழ் இளம் பெண்களும் மற்றும் பையன்களும் வளர்ந்து வந்தார்கள். இளம் ஜெயவர் தினியும் அதற்கு விதிவிலக்காக இருக்க வில்லை, மற்றும் அவளது மனதுக்கு வெறு ப்பான பிரச்சாரங்களால் நஞ்சூட்டப் பட்டிருந்தது, அவள் செஞ்சோலை அனாதை இல்லத்தை சேர்ந்த ஒரு அனாதையாக இருந்தபடியால் அதைச் செய்வது எல்.ரீ .ரீ .ஈ யினருக்கு வெகு எளிதாக இருந்தது. ஜெயவர்தினி ஒரு போதும் ஒரு அன்பான அன்னையின் அரவணைப்பையோ இன் கனிவையோ உணர்ந்ததில்லை. ஒரு குடும்பத்தின் உண்மையான அன்பு எப்படியிருக்கும் என்று எண்ணற்ற தடவைகள் அவள் கனவுகள் கண்டதுண்டு, தான் தனது பெற்றோர்களை இழந்திருக் காவிட்டால் தனக்கும் அந்த அன்பு கிடைத்திருக்கும் என்று அவளால் அதிசயப்பட மட்டுமே முடிந்தது. அவள் விரும்பியதெல்லாம் தன்னைப்பற்றி அக்கறை காட்டும் நபர்களுடனான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கே.

சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கே அவள் எப்போதும் ஆசைப் பட்டாள். ஆனால் வாழ்க்கை அவளை ஒருபோதும் நியாயமான முறையில் நடத்தாததையே காணக்கூடியதாக இருந்தது. ஜெயவர்தினிக்கு தெரிந்த ஒரே குடும்பம் செஞ்சோலை அனாதை இல்லத்தை சேர்ந்த ஏனைய அனாதைகள், மற்றும் எல்.ரீ .ரீ .ஈ ஆகியோரை மட்டுமே.

### விஷமாக்கப்பட்ட மனது

தனக்கு தங்க ஒரு இடம்தந்து தன்னை படிக்க வைப்பதற்காக, அவள் எல்.ரீ .ரீ .ஈக்கு நன்றி உடையவளாக இருந்தாள். ஸ்ரீலங்கா இராணுவம் மற்றும் சிங்கள மக்கள் ஆகியோர்கள் கொடியவர்களாகவும் நம்ப முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள் என்கிற நம்பிக்கையுடனேயே ஜெயவர்தினி வளர்ந்துவந்தாள். அவர்கள் தமிழர்களை அழிக்க நினைப்பவர்கள் என்கிற எண்ணம் அவளுடைய மனதில் நஞ்சாக கலக்கப்பட்டிருந்தது. அந்த வெறுப்பு பின்னாளில் அவளை தீவிரவாதஅமைப்பில் இணைய வைத்து,தமிழ் மக்களை பாதுகாப்பது என்கிற பெயரில் ஒரு தவறான பயணத்துக்கு வழிநடத்தியது. "எனக்குத் தெரிந்த ஒரே குடும்பம் அந்த இல்லத்தில் வாழ்ந்த ஏனைய பிள்ளைகள் மற்றும் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் எல்.ரீ .ரீ .ஈ வீரர்கள் மட்டும்தான். எனக்குத் தெரிந்த ஒரே தாய் அனாதை இல்லத்தில் எங்களைக் கவனித்துக் கொண்ட அந்த பெண்மணி மட்டும் தான்" அவள் தனது பழைய நினைவுகளை மீட்டினாள்.

எல்.ரீ .ரீ .ஈயில் இணைந்ததின் பின்னர், அவள் அரசாங்கப் படைகளுக்கு எதிராக அர்ப்பணிப்புடனும் மற்றும் பெருமையுடனும் கடுமையாக போராடினாள்," நான் ஒரு காரணத்துக்காக போராடுகிறேன் என்பதை நான் உணர்ந்திருந்தேன், அனாதை இல்லத்திருந்த எனது சக சிறார்கள் மற்றும் பின்னர் எனது சக அங்கத்தவர்கள் இவர்களை தவிர எனது வாழ்க்கையில் வேறு யாரையும் நான் அறிந்திருக்கவில்லை. அரசாங்கப் படைகள் அதுவம் விசேடமாக இராணு வத்தினர்கள் கொடிய கொலைகாரரர்கள், அவர்கள் வெறுமே எங்களைக் கொல்வதற்காக திரிகிறார்கள் என்று எங்களை நம்ப வைத்திருந்தார்கள்". ஜெயவர்தினியை போலவே எல்.ரீ .ரீ .ஈக்காக போராடிய மற்றும் அநேக அங்கத்தவர்களையும் எல்.ரீ .ரீ .ஈ மூளைச் சலவை செய்து தவறாக வழிநடத்தியிருந்தது. எல்.ரீ. ரீ .ஈ யின் முன்னாள் கொலை இயந்திரங்களாக மாறிய முன்னாள் அப்பாவி இளைஞர்கள் எப்படி கொலை காரரர்களாக மாற்றப்பட்டார்கள் என்று சொல்வதற்கு அவர்களுக்கும் ஒரு கதை இருக்கும்.

பின்னர் தன்னைவிட மூத்த அங்கத்தவரான சிதம்பரம் நாகநாதன் என்பவரை அவளது இயக்கத்துக்குள்ளேயே சந்திக்க நேர்ந்ததுடன் இருவரும் காதல் வசமானார்கள். எனினும் அவர்களது காதல் விவகாரம் எல்.ரீ.ரீ.ஈ யினரால் சாதகமாக நோக்கப்படவில்லை. இந்த அங்கத்தவர்கள் திருமணம் செய்து குடும்பங்களை உருவாக்கினால் யுத்தம் புரிவதற்கு இயக்கத்துக்கு தேவையான மனித வலு கிட்டாமல் போய்விடும் என்று தீவிரவாத தலைவர்கள் எண்ணினார்கள். ஜெயவர்தினிக்கும் மற்றும் நாகநாதனுக்கும் அது ஒரு நீண்ட போராட்டமாகவே இருந்தது, இறுதியில் அவர்களால் அதை சமாளிக்க முடிந்தது. "எனினும் அது உண்பதற்கு சுவையான ஒரு பண்டமாக இருக்கவில்லை, நாங்கள் இருவரும் திருமணத்தில் இணைவதற்கான அனுமதியை பெற்று திருமணத்தில் இணைவதற்காக எங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை வெற்றிகரமாக செய்து முடிக்க வேண்டியிருந்தது. எனினும் நாங்கள் செய்ய வேண்டியதை சிறப்பாகச் செய்துமுடித்து இறுதியாக திருமணம் முடித்து முரசு மோட்டையில் குடியேறினோம்". அவர்கள் பங்குக்கு உரிய சோதனைகளையும் மற்றும் துயரங்களையும் அவர்கள் தாண்டி வரவேண்டியிருந்தது, ஆனால் எப்படியோ ஒருவாறு அவர்கள் தங்கள் திருமண பந்தத்தை காப்பாற்றி வந்தார்கள்.

### புலிகளின் அட்டூழியங்களை உணர்தல்

இப்படியே காலம் கடந்து சென்றபோது அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள் மற்றும் ஜெயவர்தினி தனது மூன்றாவது மகனை கர்ப்பம் தரித்தாள். ஆரம்பத்தில் தீவிரவாதிகளை நம்பியிருந்த மற்றும் பலரைப் போலவே அவளும் மெல்ல மெல்ல எல்.ரீ .ரீ.ஈயின் அட்டூழியங்களை காணலானாள்.

"எங்கள் சக போராளிகள், பயங்கரவாத தலைவர்களின் நோக்கத்தை அல்லது செயல்களை துணிவுடன் கேள்வி கேள்வி கேட்டபோது அவர்கள் தண்டிக்கப்படுவதை நான் கண்டிருக்கிறேன். அவர்களது இலட்சியத்துக்காக போராடும் தங்களது சொந்த அங்கத்தவர்களையே அவர்கள் கொலை செய்வதை நான் பல சந்தர்ப்பங்களில் கண்டுள்ளேன், ஆனால் யுத்தத்தில் காயம் பட்டு அங்கவீனர்கள் ஆவது மிகவும் துரதிருஷ்டமான சம்பவம். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் தங்களுக்கு சுமையாக இருந்த பல அங்கத்தவர்களை எல்.ரீ.ரீ.ஈ தலைவர்கள் கொன்றொழித்தார்கள்" பழையதை நினைவுகூர்ந்தார் நாகநாதன்.

அந்த போராட்டத்தில் இந்த அப்பாவி மக்கள் அகப்பட்டிருந்தபோது, இறுதியாக அது தமிழ் மக்களின் விடுதலைக்காக அல்ல ஆனால் அதிகாரத்துக்காக மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். பாதுகாப்பு படையினருக்கும் மற்றும் எல்.ரீ .ரீ .ஈ யினருக்கும் இடையில் அதிகரித்து வந்த போருக்கு மத்தியில் அப்பாவி பொதுமக்கள் அநேகர் அகப்பட்டுக் கொண்டார்கள். அவர்கள் அனைத்தையும் இழந்து அவர்களின் வாழ்க்கை சிதைந்து போயிருந்தது. எல்.ரீ .ரீ .ஈ யிடம் நல்லெண்ணம் கிடையாது மற்றும் எல்.ரீ .ரீ .ஈ தலைவர்கள் அதிகாரம் பெறுவதற்காக நடத்தப்படும் இந்த திட்டம் முழுவதிலும் தாங்கள் வெறும் பகடைக் காய்களாக பயன்படுத்தப்பட்டுள்ளோம் என்பதை அவர்கள் உணரத் தலைப்பட்டார்கள்.

போரின் இறுதிக்கட்டத்தில் எல்.ரீ .ரீ .ஈயின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்த பொது மக்களை அரசாங்கப் படைகள் இருந்த பக்கம் வரும்படி அரசாங்கப் படையினர் கட்டளை பிறப்பித்தனர் என்று ஜெயவர்தினி தெரிவித்தாள். " இருந்தும் எல்.ரீ .ரீ .ஈ அங்கத்தவர்கள் அவர்களை கடந்து செல்ல அனுமதிக்கவில்லை, மற்றும் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கடந்து செல்ல முயன்றவர்கள் மீது அவர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். ஆயிரக்கணக்கானவர்களை தடுத்து வைத்து அவர்களை வெளி உலகத்திடமிருந்து பிரித்து வைத்திருந்த மணல் அணைகளை கடந்து சென்றவர்கள், உண்மையான சுதந்திரம் என்று தங்களை நம்ப வைத்திருந்த சுதந்திரம் பயங்கரவாதிகளின் பக்கம் இல்லை, ஆனால் அந்த மணல் அணைக ளுக்கு அப்பால்தான் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார்கள். அதை கடந்து சென்றவர்கள் ஒலி பெருக்கி வழியாக மற்றவர்களையும் வரும்படி தூண்டினார்கள்



- கமிலியா நத்தானியல்

மற்றும் அரசாங்கப் படைகளின் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக, எல்.ரீ .ரீ .ஈ தங்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவதற்கு இடமளிக்க மறுத்தார்கள்" என்று அவள் மேலும் தெரிவித்தாள். எல்.ரீ .ரீ .ஈ மனிதக் கேடயங்களாக வைத்திருந்தவர்களை மீட்பதற்காக அரசாங்கம் பல வழிகளிலும் முயன்றது.

### மனிதக்கேடயம்

மறுபுறத்தில் கிளர்சிக்காரர்கள் சர்வதேசத்தின் கவனத்தையும் மற்றும் அனுதாபத்தையும் தங்கள் பக்கம் ஈர்ப்பதற்காக தாக்குதலற்ற வலயத்தில் தங்கியிருந்தனார்கள்.

கிட்டத்தட்ட 300,000 பொதுமக்கள் எல்.ரீ .ரீ .ஈ யின் பிடிக்குள் சிக்கியிருந்தார்கள், பயங்கரமான இராணுவத்தின் துப்பாக்கி சூடு, மற்றும் வான்தாக்குதல்கள் என்பனவற்றிலிருந்து எல்.ரீ .ரீ .ஈ அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கியது,ஆனால் மனிதக் கேடயத்தின் மறைவிலிருந்து அரசாங்கப் படைகளுக்கு எதிராக பாரிய ஆயுதங்களை பயன்படுத்த அது அவர்களுக்கு அனுமதி வழங்கியது.

இந்தச் சமயத்தில் ஜெயவர்தினி தனது மூன்றாவது மகனை பெற்றாள். அவளும் அவளது கணவரும் தங்கள் மூத்த பிள்ளைகள் இருவரையும் மற்றும் ஏழு நாட்களே நிறைந்த மூன்றாவது மகனையும் கொண்டு அரசாங்கப் படைகளின் பக்கம் கடந்து சென்று சரணடைய முடிவு செய்தார்கள்.

எல்.ரீ .ரீ .ஈ யின் கொடூரத்தை அனுபவித்தது ஜெயவர்தினி என்கிற ஒருவர் மட்டு மல்ல. அவர்களுக்காக பல வருடங்களாக அவள் ஒரு சுதந்திரப் போராளியாக இருந்துள்ளாள், அவர்களது போராட்டத்தை மிகவும் உணர்ச்சி பூர்வமாக விசுவசி த்திருந்தாள். எனினும் மணல் அணைக்கு அப்பாலிருந்து கமழ்ந்து வரும் உண்மையான சுதந்திரத்தின் நறுமணத்தை அவள் உணரத் தொடங்கியதும், அவள் அங்கு செல்ல விரும்பினாள். ஆனால் தமிழர்களின் சுதந்திரத்துக்காக போராடுவதாக கூறும் எல்.ரீ .ரீ .ஈ தான் அவர்களது சுதந்திரத்தை தடுக்கும் முக்கியமான ஒன்றாக இருந்தது. "என்னையும் மற்றும் நான் முதலில் எடுத்துச் சென்ற எனது ஏழுநாள் குழந்தையையும் எனது கணவர் பாதுகாப்பாக மணல் அணையை நோக்கி அழைத்துச் சென்று அதைக் கடப்பதற்கு எனக்கு உதவி செய்துவிட்டு, எங்களது மற்ற இரண்டு குழந்தைகளையும் எடுத்து வர சென்ற அதேவேளை எல்.ரீ .ரீ .ஈ எங்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. மற்றும் ஏதோ ஒன்று எனது

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தியச் செய்திகள்**

# கச்சத்தீவு அருகே நிறுத்தப்பட்டுள்ள இலங்கைப் போர்க்கப்பல்கள் !

கச்சத்தீவு அருகே இலங்கைப் போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று திரும்பிய நாட்டுப் படகு மீனவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த 45 நாட்களாக இருந்த மீன்பிடித் தடைக்காலம் கடந்த மே 29ம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், ராமேஸ்வரத தைத் தவிர்த்த மற்ற பகுதி மீனவர்கள் அன்றே கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். ஆனால் ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் வரும் சனிக்கிழமைதான் மீன்பிடிக்கச் செல்கின்றனர்.

இந்த நிலையில், அன்று மீன்பிடிக்க நாட்டுப் படகில் கடலுக்குச் சென்ற தங்கச்சி மடம் மீனவர்கள் சிலர் கரை திரும்பிய பின்னர் கூறுகையில், இலங்கை ராணுவம் கச்சத்தீவு அருகே 4 போர்க் கப்பகளை நிறுத்தியுள்ளது. மேலும், 5 சிறிய ரோந்துக் கப்பல்களும் நிறுத்தப்பட்டுள்ளன. கச்சத்தீவு பகுதியைச் சுற்றி மிதவை பலூன்கள் அதிகம் வைக்கப்பட்டுள்ளன. பொதுவாக விசைப்படகு மீனவர்கள் இரட்டை மடி வலை உள்ளிட்ட தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படு த்துவர் என்பதால் அதிகம் கண்காணிப்பார்கள், அவர்களை இலங்கை ராணுவத்தினர் அடித்து விரட்டுவார்கள். ஆனால், நாட்டுப் படகு மீன்வர்களை பெரிதும் தடை செய்வதில்லை. ஆனால், இந்த முறை நாட்டுப் படகு மீனவர்களையும் இனிமேல் இங்கே மீன் பிடிக்க வரக்கூடாது என்று எச்சரித்து அனுப்பினார்கள் என்றனர்.

# ராஜீவ் கொலை வழக்கு மீள்விசாரணைக்கு ஏற்பு!

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கை மறுவிசாரணை நடத்தகோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் வெளியுறவுத்துறை செயலாளர் பதில் அளிக்க உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவை கடந்த வாரம் ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் ஜுன் 5க்குள் வெளியுறவுத்துறை செயலாளர் பதில் அளிக்க உத்தரவிட்டுள்ளதுடன் ரோ அமைப்பு, மற்றும் சி.பி.ஐ. துணை இயக்குநரும் அன்றையதினம் பதில் அளிக்க வேண்டும் என்று ஆணைப்பிறப்பித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கை மறைக்கப்பட்ட உண்மைகளை கண்டறிய மறுவிசாரணை நடத்தக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மதுரை மேலூரைச் சேர்ந்த வழக்கறிஞர் சாந்தகுமரேசன் என்பவர் இந்த மனுவை தாக்கல் செய்தார்.அதில், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் வீடியோ ஆதாரங்கள் சிறப்பு புலனாய்வு குழுவிடம் அளிக்கப்படவில்லை. இந்த வழக்கில் மறுவிசாரணைக்கு உத்தரவிடுவதன் மூலம் மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிப்படும். விசாரணை முழுவதும் நிறைவடையா மலேயே முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்கு எக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.இதன் அடிப்படையில் இந்த மூவருக்கும் தண்டனை ரத்து செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக மறுவிசாரணை நடத்த உத்தரவிடவேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த மனுவை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டே மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

# இந்திய பகுதிகளை ஆக்கிரமிக்க சீனா திட்டம் - முலாயம்

இமாசலப் பிரதேசம் முதல் வடகிழக்கு மாநிலங்கள் வரை இந்தியாவின் பெரும ளவிலான நிலப்பகுதிகளை ஆக்கிரமிக்க சீனா திட்டமிட்டுள்ளது. எனவே, சீன விஷயத்தில் மத்திய அரசு எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்று சமாஜவாதி கட்சித் தலைவர் முலாயம் சிங் கூறியுள்ளார்.

தில்லயில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் முலாயம் சிங் பேசிய போது:""இந்தியப் பகுதிகளை ஆக்கிரமிக்க சீனா முயற்சித்து வருவது குறித்து கடந்த 10 ஆண்டுகளாக கூறி வருகிறேன்.

அதை யாரும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. என்ன விலை கொடுத தாவது இந்தியாவின் பகுதிகளை தன்னுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று சீனா விரும்புகிறது. லடாக்கிலிருந்து இப்போதைக்கு சீனப்படைகள் வெளியேறி இருக்கலாம். ஆனால், இதுபோன்ற ஆக்கிர மிப்பு முயற்சிகளை சீனா மீண்டும் மேற் கொள்ளும் என்பதை மறந்துவிடக் கூடாது.

சீனா தொடர்பான தவறான எண்ணத்தை இந்தியா கைவிட வேண்டும்.

இமாசலப் பிரதேசம் முதல் வடக்கு கிழக்கு மாநிலங்கள் வரை பெரும்பகுதி நிலங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சீனா திட்டமிட்டுள்ளது.

சீனாவின் வரைபடத்தில் இந்தியாவுக்குச் சொந்தமான 7 பகுதிகள் இடம் பெற்றுள்ளன. அருணாசலப் பிரதேச மாநிலம் தனக்கு சொந்தமானது என்று சீனா கூறி வருகிறது. அப்பகுதியினர் சீனாவுக்கு வருவதற்கு விசா பெறத் தேவையில்லையென்றும் அந்நாடு தெரிவித்துள்ளது. பாகிஸ்தானை விட சீனாதான் நமது மிகப்பெரிய எதிரி. எனவே, சீனாவுக்கு எதிராக கடுமையான நிலையை இந்தியா எடுக்க வேண்டும்'' என்றார் முலாயம் சிங்.

# இலங்கையில், சீதா தேவிக்கு ஆலயம் கட்டும் இந்தியா

இலங்கையில், சீதா தேவி தீயில் இறங்கிய இடத்தில், ஒருகோடி ரூபாய் செலவில், கோவில் கட்டப்படும் என மத்திய பிரதேசமாநில முதல்வர், சிவராஜ் சிங் சவுகான் அறிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பன்னா மாவட்டத்தில் உள்ள குன்ஹார் என்ற இடத்தில் நடந்த விழாவில் கலந்து.கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக இந்தியச்செய்திகள் தெரிவிக்கின்றன.

சீதைக்கு இலங்கையில் கோவில் கட்டுவதற்கு, மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன், இதற்கான பணி ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாரிஸ் மாநகரில் கோவை நந்தனின் 'கழுகு நிழல்' நூல் வெளியீடு!





இன்றைய நவீன உலகின், தனியார் மயம்,தாராள மயம், உலகமயமாதல் போன்ற ஏகாதிபத்தியச் சுரண்டல்களுக் கெதிரான சரியான பார்வை உள்ள கோவை நந்தனின் கழுகு நிழல் என்னும் நூல் வெளியீடு கடந்த 26ம்திகதி ஞாயிற்றுக்கிழமை பாரிஸ் நகரில் சிறப்பாக இடம் பெற்றது.

எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் ஊடகவியலாளர் என். கே. துரைசிங்கம்,. கு.உதயகுமார்ஆகியோர் விமர்சன உரையாற்றினர்.திருமதி ரஜனி குகநாதன் நூலினை வெளியிடுவைக்க முதற்பிரதியைச் சுவிஸ் மூர்த்தி மாஸ்ரர் பெற்றுக்கொண்டார்.

சர்வதேச விவகாரங்களை மட்டுமல்லாது ஈழத்துப் பிரச்சினைகளிலும் உலகளாவிய ஆய்வு நோக்கும், யதார்த்தப் பார்வையும் கோவை நந்தனின் எழுத்துகளில் தெரிகிறது. தேடலில் ஈடுபட்டுத் திரட்டி, அதனைத் தொகுத்துச் சாதாரண வாசகனும் விளங்கிக்கொள்ளும் விதத்தில் எழுதும் ஆற்றலுள்ளவராக அவர் சிறந்து விளங்குகிறார். இத்தகைய பார்வையில், தேடலில் அவர் மேலும் ஈடுபட்டுப் பல படைப்புகளை மக்களுக்குத் தொடர்ந்து தரவேண்டும். அவரது கருத்துக்களால் கவரப்பட்டவர்கள் மட்டுமல்ல அவரது நட்புலகமும் பெரியது என்பதை இக்கூட்டம் எடுத்துக்காட்டுவது மகிழ்ச்சியளிக்கிறது என வீ. ரீ .இளங்கோவன் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

என். கே. துரைசிங்கம் உரையாற்றுகையில், 'சாதியத்தையும், முதலாளித்துவத்தையும் முற்றாகவே வெறுக்கும் இலட்சியப்பற்றோடு, அண்மைக்கால உலக மாற்றங்களை உற்றுநோக்கிச் சரியான கண்ணோட்டத்தில் தனது படைப்புகளைத் தந்திருக்கும் நந்தன் பாராட்டுக்குரியவர்' என்றார்.

மக்களுக்குப் பிரயோசனமான, சிந்தனையைத் தூண்டுகின்ற, மாற்றத்துக்கான வழிவகைகளைச் சுட்டி நிற்கின்ற மாதிரி, இலங்கை முதல் சர்வதேச விவகாரங்கள் பலவற்றையும் அலசி ஆராய்ந்து அழகுற எழுதப்பட்ட படைப்புகளைக் கொண்ட சிறந்த நூல் 'கழுகு நிழல்' என கு. உதயகுமார் தனதுரையில் குறிப்பிட்டார்.

நிச்சாமம் பதிப்பாக வெளியீடான இந்த நூலின் வெளியீட்டுரையை பதிப்பாளர் சுகன் சிறப்புற நிகழ்த்தினார். சி.மனோகரன்(ஓசை.மனோ) முகம் திரைப்பட இயக்குனர் கவிஞர் அருந்ததி, ஆகியோர் சிறப்புரையாற்ற நூலாசிரியர் கோவை நந்தன் ஏற்புரை வழங்கினார்.

விழாவின் சிறப்பு நிகழ்வாக, இன்றைய இலங்கையும் புலம் பெயர் அரசியலும்' என்ற பொருளில் திறந்த விவாத அரங்கு இடம் பெற்றது.சம உரிமை இயக்கத்தைச் சேர்ந்த பி.ரயாகரன்,இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியைச் சேர்ந்த அ.தேவதாசன், ஜனநாயகத்திற்கான கிழக்கிலங்கை முன்னணியைச் சேர்ந்த எம்.ஆர். ஸ்ராலின், ஈ. பி. ஆர். எல். எவ். பத்மநாபா அணியின் சோலையூரான் ஆகியோர் கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன் வைத்தனர்.

சமகால அரசியல் அலசலாக சபையோரின் கருத்துக்களுடன் இடம்பெற்ற இந்த திறந்த விவாதத்தை சோபாசக்தி திறம்பட நெறிப்படுத்தியிருந்தார்.

பல்வேறு கருத்துக்களைக் கொண்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரசியல் ஆர்வலர்கள் என மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்தினருடன் விழா சிறப்புற நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல்......**(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடைப்பிடிக்கும் நாடுகள் என்ற காரணத்தினால் புத்த தர்மத்தை வலுவடையச் செய்து அனுகூலமான வாழ்க்கையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

உலக மொத்த சனத் தொகையில் 60 வீத மக்கள் ஆசிய வலயத்தில் வாழ்வதாகவும் இந்த மக்களின் வசதிகளை மேம்படுத்துவதற்காக போக்குவரத்து கட்டமைப்பை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் தாய்லாந்து பிரதமர் கூறினார்.

**கச்சதீவை......**(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசில் அங்கம் வகிக்கும் சிறுபான்மையினக் கட்சிகளும், இடதுசாரி கட்சிகளும் மேலும் பலப்படுத்தவேண்டும் என அதற்கு ஆதரவு தெரிவித்தாலும், அரச கூட்டணியில் பிரதான கட்சியாகத் திகழும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இது விடயத்தில் தமது நிலைப்பாட்டை அறிவிக்காமல் தொடர்ந்தும் மௌனம் காத்துவருகின்றது.

கூட்டு அரசுக்குள் கருத்து வேறுபாடென்பது அரசியல் ஜனநாயகக் கலாசாரம் எனக் கூறி இது விடயத்திலிருந்து அரசு நழுவிச் செல்கின்றது. இதன் மூலம் 13வது திருத்தச்சட்டத்தில் மாற்றம் கொண்டுவருவதற்கு அரசு பச்சைக்கொடி காட்டும் என்ற விடயம் உறுதியாகின்றது.

அத்துடன், வடக்குத் தேர்தலுக்கு முன்னர் அதில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிப்பதற்கு சட்டமூலமொன்றை நிறைவேற்றிக்கொள்வதற்கும் அரசு முயற்சிக்கின்றது என அறியக்கூடியதாகவுள்ளது.

இந்நிலையில், அரசமைப்பிலிருந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கோ அல்லது அதை பலவீனப்படுத்துவதற்கோ இலங்கை அரசு முயலும் பட்சத்தில் இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இலங்கையிடமிருந்து கச்சதீவை இந்தியா மீளப்பெறும் எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் டில்லி உயர்மட்டம் தீவிரமாக ஆராய்ந்துவருகிறது.1974ஆம் ஆண்டுவரை இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழிருந்த கச்சதீவு அதன் பின்னர் இலங்கைக்கு வழங்கப்பட்டது. சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி கச்சதீவை இந்தியா இலங்கைக்கு வழங்கியது.எனவே, இந்தியாவின் தலையீட்டின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13 விடயத்தில் இலங்கை தலையிடுமானால், கச்சதீவை இந்தியா நிச்சயம் மீளப்பெறும் என்று அரசியல் ஆய்வாளர்களும் எதிர்வு கூறுகின்றனர்.

அதேவேளை, இலங்கைக்கு கச்சதீவை வழங்குவதற்கு எதிராக இந்தியாவின் தமிழக கட்சிகள் இன்றும் குரலெழுப்பி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஊடக ஒழுக்க விதிகள் விரைவில் அறிமுகம்

ஊடக ஒழுக்க விதிகள் விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் ஊடக ஒழுக்கக் கோவை பாராளுமன்றில் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.உத்தேச வரைவுத் திட்டம் ஏற்கனவே தயாரிக்க ப்பட்டு ள்ளதாகவும் இந்த உத்தேச திருத்தச் சட்டம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சமர்ப்பிக கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**கனடாவில் ........**(12ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக்கொல்லப்பட்ட சுரேந்திரா, தனது மனைவி மற்றும் 4 வயது மகனுடன் பிஞ்ச் அவென்யூவில் வசித்து வந்துள்ளார். அவர் தனது பிறந்தநாளை புதன்கிழமை கொண்டாடியுள்ளார். இவரை இலக்கு வைத்தே துப்பாக்கிப பிரயோகம் நடாத்தபப்பட்டதாகவும் காவல் துறையினர் நம்புகின்றனர். சுற்றியுள்ள வீடுகளில் உள்ள கண்காணிப்பு காணொலிப் பதிவு கருவிகளில் கொலையாளிகள் மூவரும் பதிவாகியுள்ளனர்.

அவர்களின் அங்க அடையாளங்களை வெளியிட்டுள்ள காவல்துறையினர் கொலையாளிகளை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

**சுதர்சன.......**(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் பங்குபற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த மாநாட்டில் பங்குபற்றுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் எந்த முடிவும் எடுக்கவில்லை எனத் தெரியவருகிறது.

**இலங்கை..**(12ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் சர்ச்சைகள் காணப்படுவதில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை கனேடிய அரசாங்கம் மட்டும் புறக்கணிப்பது உள்நாட்டு அரசியலை கருத்திற் கொண்டே என தாம் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**மோசமான.......**(9ம் பக்கத் தொடர்ச்சி)

முகத்தை தாக்கியதுதான் கடைசியாக எனக்கு தெரிந்தது:" என்று அவள் சொன்னாள்

தனது மனைவி கீழே விழுவதை அவதானித்த அந்தக் கணமே தான் அவளை நோக்கி ஓடியதாகவும் ஆனால் அவளது சலனமற்ற சடலம் இரத்த வெள்ளத்தில் கிடப்பதையே தான் கண்டதாகவும் நாகநாதன் கூறினார்." எனது மனைவியும் எங்களது பிள்ளையும் இறந்து விட்டனர் என்றே நான் எண்ணினேன். நான் அங்கிருந்து திரும்புவதற்கு எத்தனித்த சமயம் அந்த குழந்தை ஒரு சத்தத்தை வெளிப்படுத்தியது, நான் காயமடைந்த அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு இராணுவம் இருந்த பக்கமாக ஓடினேன். இராணுவ வீரர்கள் காயமடைந்த அந்தக் குழந்தையை எனது கரங்களிலிருந்து எடுத்து ஒரு உலங்கு வானூர்தியில் போட்டு எங்கேயோ அனுப்பினார்கள், மற்றும் அந்த நேரத்தில் அந்த குழந்தையை எங்கு அனுப்பினார்கள் என்று எனக்குத் தெரியாது" என்று வேதனையுடன் அவர் அதை நினைவு கூர்ந்தார்.

### உறுதியான நினைவூட்டல்

எப்படியோ ஜெயவர்தினியின் அதிர்ஷ்டம்தான் இராணுவம் அவளை கண்டது. அவள் இன்னமும் உயிரோடிருப்பதை அறிந்த இராணுவம்அவளை உலங்கு வானூர்தி மூலமாக கொழும்புக்கு அனுப்பிவைத்தது. "எனக்கு ஆறு மாதங்களுக்கு பின்னர்தான் நினைவு திரும்பியது, அப்போது வைத்தியர்கள் எனது முகத்தின்மீது பல அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டிருந்தார்கள், அந்த வெடி எனது முகத்தின் ஒரு பகுதியை சிதைத்து விட்டது. நான் எனது கண்களில் ஒன்றை இழந்து விட்டேன்,பல எலும்புகள் உட்பட எனது மூக்கும் சிதைந்து விட்டது. எனக்கு மூக்கு இருக்கவில்லை, ஆனால் வைத்தியர்கள் எனது தொடைப் பகுதியில் இருந்து ஒரு துண்டு தசையை வெட்டியெடுத்து எனது முகத்தை மறுவடிவாக்கம் செய்தார்கள். இன்று எனது முகத்தை கண்ணாடியில் பார்த்தால் நான் பார்ப்பதைக்கண்டு அச்சம் அடைகிறேன். இருந்தாலும் அவையாவும் எனக்கு நடந்தவைகளின் உறுதியான ஒரு நினைவூட்டல்,அது எனக்கு நடந்தவைகள் என நான் நம்புகிறேன். இப்போது நான் வெறும் எண்ணிக்கை மட்டுமே, போராடும் இயந்திரத்தின் ஒரு பகுதி மட்டுமே அதைவிட என்னால் எல்.ரீ.ரீ.ஈக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதை நான் உணர்கிறேன்

எனினும் ஜெயவர்தினி; இப்போது இராணுவத்தையும் மற்றும் சிங்களவர்களையும் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றியவர்கள் என்கிற கண்ணோட்டத்திலேயே பார்க்கிறாள். "இராணுவமோ அல்லது அரசாங்கமோ எனது உயிரை காப்பாற்றியதற்கு வலுவான ஒரு காரணம் இருக்க வேண்டும். அவர்கள் ஆறுமாதங்களாக போராடி எனது உயிரை மீட்டு எனக்கு சாவிலிருந்து புத்துயிர் அளித்துள்ளார்கள்.அதற்கு முரண்பாடாக அவர்கள் மீது திருட்டு, சித்திரவதை என்று பல குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன,அவர்களது அன்புக்கும் இரக்கத்துக்கும் நான் ஒரு நல்ல உதாரணம். நான் போரின்போது எனது மோதிர விரலை இழந்து விட்டேன். மற்றும் நீங்கள் நம்ப மாட்டீர்கள் என்னை கண்டெடுத்த இராணுவ வீரர்கள் எனது இழந்த விரலிலிருந்த திருமண மோதிரத்தை பத்திரமாக பாதுகாத்து வைத்திருந்து எனக்கு நினைவு திரும்பியதும் என்னிடம் திரும்ப ஒப்படைத்தார்கள்" தன்னை காப்பாற்றியவர்கள் மீது அளவிடமுடியாது நன்றிப் பெருக்குடன் அவள் அதை தெரிவித்தாள்.

ஜெயவர்தினியின் குழந்தை லேடி றிட்ஜ்வே வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அவளுக்கு நினைவில்லாத காலம் முழுவதும் அந்தக் குழந்தை பத்திரமாக பராமரிக்கப்பட்டு வந்திருந்தது. "எனக்கு நினைவு திரும்பியதும், நான் வைத்தியசாலை அதிகாரிகளிடம் எனக்கு தாக்குதல் நடைபெற்ற அந்த நேரத்தில், பிறந்து ஏழு நாள் மட்டுமே நிரம்பிய ஒரு குழந்தை இருந்தது. எனது மகன் உயிரோடிருக்கிறானா இல்லையா என்று எனக்குத் தெரியாது என்று கூறினேன். எனினும் அவர்களது பதிவுகளில் இருந்து, இராணுவம் வான்வழியாக ஒரு குழந்தையை கொழும்புக்கு அனுப்பி வைத்ததாகவும் மற்றும் தாயற்ற அந்தக் குழந்தை சிறுவர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் ஒரு டி.என்.ஏ சோதனை மேற கொண்டதின் பின் அந்தக் குழந்தை என்னுடையது என உறுதி செய்யப்பட்டு எனது சிறிய மகன் என்னிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டான்.

என்னையும் எனது மகனையும் காப்பாற்ற சிங்கள மக்கள் மேற்கொண்ட வலுவான முயற்சியை எண்ணும்போது எனக்கு பேசுவதற்கு வார்த்தைகளே வரவில்லை, இன்றும் கூட அவர்களை அழிப்பதற்கு தீவிரமாக போராடிய என்னைப்போன்ற ஒருத்தியிடம் அவர்கள் காட்டிய தாராள மனதையும் கருணையையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களது இரக்கத்தின் பரிமாணம் எனது புரிதலுணர்வுக்கும் அப்பாற்பட்டது, சிறுவர் வைத்திய சாலையை சேர்ந்த ஒரு வைத்தியர், அவருக்குகூட அந்த நேரத்தில் ஒரு பிள்ளை இருந்தது, எனது பிள்ளைக்கு உயிர் கொடுப்பதற்காக வேண்டி தனது பாலை ஊட்டியுள்ளார்.

அந்தப் பெண்மணிக்கு நான் எப்படி எனது நன்றியை திரும்பச் செலுத்துவேன் அல்லது எனக்கு செய்தவற்றுக்கு எல்லாம் இராணுவத்துக்கு நான் எப்படி நன்றி சொல்லுவேன்? அவர்கள் மீதுள்ள எனது நன்றிக்கடனை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது: என்று சொன்னாள் ஜெயவர்தினி.

### எல்.ரீ .ரீ .ஈ - கபடதாரிகள்

முன்னாள் எல்.ரீ .ரீ .ஈ தலைவர்கள் பலர் இப்போது அனுபவிக்கும் சுதந்திரத்தை காணும்போது தனக்கு வெறுப்பை தவிர வேறு எதுவும் தோன்றவில்லை என்று ஜெயவர்தினி கூறினாள். " இந்த கபடதாரிகள் எங்களை கைவிட்டுவிட்டு, எங்களை சாக விட்டுவிட்டு, தங்கள் சொந்த வழிகளை செதுக்கிக் கொண்டு போகிறார்கள் என்று அவள் மேலும் கூறினாள்.

இன்று ஜெயவர்தினி மற்றும் நாகநாதன் ஆகியோர்கள் தங்கள் இரண்டு குழந்தைகளுடன் யாழ்ப்பாணம், வட்டுக் கோட்டையிலுள்ள, கோட்டைகாட்டில் சுதந்திரக்காற்றை சுவாசித்தபடி வாழ்கிறார்கள். ஜெயவர்தினி மற்றும் நாகநாதன் போன்ற இன்னும் பல எல்.ரீ .ரீ .ஈ அங்கத்தவர்கள் சமாதானமாக வாழ்வதை தவிர வேறு எதையும் செய்வதற்கு வற்புறுத்த ப்படுவதில்லை. அழிந்துபோன தங்கள் வாழ்க்கையை அவர்கள் மெதுவாக மீளக்கட்டியெழுப்பி வருகிறார்கள். தமிழ் புலம்பெயர் சமூகத்திலுள்ள சில சக்திகள், இந்த நேரத்தில் தங்கள் பிள்ளைகள் வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கும் போது இங்குள்ள தமிழர்களுக்காக அக்கறை தெரிவித்து குரலெழு ப்புகிறார்கள். இதுதானா அவர்கள் தங்கள் மக்களுக்காக செய்வது அல்லது இந்த நாடுகளால் தங்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமையை பாதுகாக்கவும் மற்றும் தங்களை திருப்பி அனுப்பாமல் தங்கள் நலன்களை பாதுகாக்கவேண்டியும் இதை செய்கிறார்களா? தமிழ் மக்களுக்கு ஒரு தனிநாடு வேண்டி தாங்கள் போராடுவதாக அவர்கள் கூறிக்கொள்கிறார்க,இருந்தும் அவர்கள் இப்போது குடியிருக்கும் வெளிநாடுகளில் தங்களுக்கு உள்ள வசதிகள் யாவற்றையும் விட்டுவிட்டு இந்த நாட்டுக்கு வந்து அவர்கள் கோரிக்கை விடும்; தனிநாட்டில் குடியிருப்பார்களா? நிச்சயமாக இல்லை.

போரில் அகப்பட்ட மக்களே அதிகம் இன்னல்களை அனுபவித்துள்ளார்கள். அவர்களில் யாரும் திரும்பவும் அதைப்போன்ற ஒன்றை நோக்கி செல்வதை விரும்பவேயில்லை. ஒருபோதும் விரும்பவில்லை.

**தேனீ மொழிபெயர்ப்பு: எஸ்.குமார்**

**நன்றி - தேனீ**

எழுகதிர்
ELUKATHIR

வாரம் தோறும் தாய்நிலத்தினதும் புலத்தினதும் செய்திகளுடன்
இலங்கையிலும் ஐரோப்பாவிலும் வெளியாகும் எழுகதிர் பத்திரிகையில்
உங்களது வர்த்தக விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள்,
மரணஅறிவித்தல்கள், நினைவஞ்சலிகள் ஆகியன இடம்பெறவேண்டுமானால்
ஐரோப்பிய தொடர்புகளுக்கு அழையுங்கள் : 0033753001476



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
ELUKATHIR

## கனடாவில் தமிழர் ஒருவர் மூவர் குழுவால் சுட்டுக்கொலை!

கனடாவில் ரொரன்ரோ கிழக்குப் பகுதியில் தமிழர் ஒருவர், கடந்த வாரம் வியாழக்கிழமை மாலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.
வைத்திலிங்கம் சுரேந்திரா என்ற 38 வயதுடையவரே அவரது வீட்டின் பின்புறம் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். மூன்று பேர் அவரது மார்பில் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக கனேடியக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (11ம் பக்கம் பார்க்க)

# தடுப்புக்காவலில் உள்ள புலிகள் விபரங்களை வெளியிட தயார்!

### -அரசு ஐநாவில் அறிவிப்பு!

சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட புலிகள் தொடர்பாக 3 ஆயிரத்து 200 முறைப்பாடுகள் அவர்களு டைய உறவினர்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளன. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளி களின் பெயர் விவரங்களை வெளியிடத் தயார் என ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.
இலங்கைப் புலனாய்வுத் துறையினர் இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட போராளிகள் தொடர்பாக 3ஆயிரத்து 200 முறைப்பாடுகளை அவர்களுடைய உறவினர்களிடம் இருந்து பெற்றுள்ளனர்.
இதில் 2 ஆயிரத்து 729 முறைப்பாடுகளே முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் ஆரியசிங்க கூறினார்.
முறையாகப் பதிவு செய்யப்பட்டவர்களில் ஆயிரத்து 101 முறைப்பாடுகள் தொடர்பாகத் தாம் இதுவரை விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும், விசாரணை முடிவடைந்து தடுப்புக் காவலிலுள்ள விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் புலிகள் இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்களின் விவரங்களை வெளியிடத்தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# இராணுவப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் வடக்கு விஜயம்!

இந்திய இராணுவப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் நாயகம் கடந்த வாரம் யாழ். மாவட்ட படைத் தளபதியை பலாலியில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.
லெப். ஜெனரல் ஆர்.என்.சிங் தலைமையிலான 4 பேர் கொண்ட குழுவினர் யாழ். குடாநாட்டுக்கு கடந்த வாரம் புதன்கிழமை பயணம் ஒன்றை மேற்கொண்டனர்.
இவர்கள் யாழ்ப்பாணத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.
அத்துடன் இவர்கள் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவை பலாலியில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். எனினும் பேச்சின் போது ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து எதுவும் தெரியவரவில்லை. யாழ். மாவட்டத் தளபதியை சந்தித்துப் பேசினார் என்பதை இராணுவ வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.
அத்துடன் பலாலியில் நடைபெற்ற விசேட வைபவம் ஒன்றிலும் இந்தக் குழுவினர் கலந்துகொண்டனர் எனத் தெரியவந்தது. 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இந்தியப் படையினர் நினைவாக பலாலி விமான நிலையத் தளத்தினுள் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கும் இவர்கள் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர்.ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் சீனா சென்றுள்ள நிலையில், இந்தியப் இராணுவப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் நாயகம் யாழ்ப்பாணத்துக்கு திடீர் பயணத்தை மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்துள்ளார்.
இந்த விஜயத்தை, இரகசிய விஜயம் என்றும் இரகசிய பேச்சுவார்த்தை என்றுமே தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால் அவர்களின் விஜயத்திற்கு முதல்நாளே, யாழ். தளபதியின் ஊடக இணைப்பாளர் மேஜர் மல்லிமாராச்சி, இந்த விஜயம் குறித்து ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


## வன்னியிலும் படையினருடன் ஆலோசனை!



இந்திய இராணுவப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் நாயகம் லெப்.ஜெனரல் ஆர்.என்.சிங் வன்னிப்படைத் தலைமையகத்துக்கும் பயணம் மேற்கொண்டார்.
யாழ்.படைத் தலைமையகத்துக்குச் சென்று மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவுடன் பேச்சுக்களை நடத்திய லெப். ஜெனரல் ஆர்.என்.சிங் பின்னர் வவுனியாவுக்கு சென்றுள்ளார்.
வவுனியா விமானப்படைத் தளத்தில் சிறப்பு விமானம் மூலம் வந்திறங்கிய லெப்.ஜெனரல் ஆர்.என்.சிங்கை வன்னிப் படைத் தலைமையகத் தளபதி மெஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா வரவேற்று அழைத்துச் சென்றார்.
பின்னர், வன்னிப் படைகளின் தலைமையகத்தில் இந்திய இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினருக்கும், வன்னிப் படைத்தலைமையக உயரதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.
இதன்போது வன்னியின் தற்போதைய நிலைமைகள், மீள்குடியமர்வு போன்ற விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கைக்கு எதிராக கனடா ஏன் செயற்படுகின்றது?

### முன்னாள் தூதுவர் தரும் விளக்கம்!



தமிழ் வாக்காளர்களின் ஆதரவை திரட்டவே கனடா, இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றது என இலங்கைக்கான கனடாவின் முன்னாள் உயர்ஸ்தானிகர் மார்டின் கொலாகொட் தெரிவித்துள்ளார்.
கனேடிய வாழ் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தே தற்போதைய அரசாங்கம், பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை புறக்கணிக்க முயற்சித்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.
உள்நாட்டு அரசியல் நோக்கங்கள் இந்த விவகாரத்தில் மேலோங்கிக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். 1983ம் ஆண்டு காலப் பகுதியில் கொலாகொட் இலங்கையில் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
இலங்கை மனித உரிமை நிலைமைகள் மோசமாக காணப்படுகின்றது என்பதில் தமக்கு மாற்றுக் கருத்து கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்தத்தின் பின்னர் மனித உரிமை நிலைமைகள் மேம்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.
நீதவான்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர், ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர், அரசாங்கத்தை விமர்சனம் செய்வோருக்கு எதிராக அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (11ம் பக்கம் பார்க்க)

PRINTED BY MULTI LINES ADVERTISING (PVT) LTD 04.06.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org